ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

## தெய்வீக மாதப்பத்திரிகை

வேணு : 13 அக்டோபர் 2007 கானம் : 3

## பொருளடக்கம்

பக்கம்

1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் ...
2. மதுரமான மஹனீயர் - 141 ...
3. பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் ...
4. மாதம் ஒரு புத்தகம் ...
5. மனம் போல் வாழ்வு ...
6. பாலகர்களுக்கு ஒரு கதை - 113 ...
7. மாலே மணிவண்ணா -55 ...
8. பிருந்தாவனமும் நந்தகுமாரனும் ...
9. ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து-139 ...
10. செய்திகள் ...

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

**செல்லக்கிளியே! செல்லக்கிளியே!!**

*ராகம் : ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் என்ற மெட்டு*

*செல்லக்கிளியே! செல்லக்கிளியே!*
*தின்னப் பழங்கள் வேண்டுமோ?*
*தின்னப் பழங்கள் வேண்டுமென்றால்*
*கண்ணனிடம் தூது செல்வாயே!*

*அலுவலில் அவனும் ஆழ்ந்திருந்தால் – என்*
*தாபத்தை எடுத்துரைத்திடுவாய்!*
*என்னையே மறந்திருப்பானாகில்*
*செல்லமாய் என் நிலை இடித்துரைப்பாய்!*

*மங்கையர் பலருடன் மகிழ்ந்திருந்தால்*
*சொல்லாமல் நீயும் வந்திடுவாய்!*
*கண்டதும் கேட்டதும் உன்னோடு போகட்டும்*
*என்னிடம் சொல்லாமல் இருந்திடுவாய்!*


**அறிவிப்பு**

மதுரமுரளி இதழில் விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன.

**கட்டண விபரம்** :

(5 வரிகள் / 40 வார்த்தைகள்)
¼ Page Size Rs. 2000/-

விளம்பரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி : ''மதுரமுரளி'',
குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்,
Admin. Office : New No. 51, Old No. 24, 7th Avenue,
Ashok Nagar, Chennai - 600 083 Phone : 044-24895875

சமீபத்தில், கோவிந்தபுரத்தில் ஸ்ரீ சைதன்ய குடீர திறப்பு விழா நடைபெற்றது. அதன் வைபவத்தைப் பற்றி ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் சத்சங்கத்தில் பேசினார்கள்.

‘‘பண்டரீபுரத்தின் அருகாமையில் உள்ள ஆலந்தி என்ற மஹாக்ஷேத்ரத்தில் ஸ்ரீ ஞானேஸ்வர மஹாராஜின் சமாதி உள்ளது. இன்றைக்கும் அந்த சமாதியைச் சுற்றி பல சாதுக்கள், பஜனை மடங்கள் அமைத்து, அவர் அவர்களுடைய சம்ப்ரதாயப்படி நாமகீர்த்தனம் செய்து வருகின்றார்கள். ஸ்ரீ ராகவேந்த்ரர், ஜீவ சமாதியாகியுள்ள மந்திராலயத்திலும், பல சம்ப்ரதாயங்களைச் சேர்ந்த பக்தர்களும் வந்து பிரார்த்தனை செய்து வருகின்றனர். அன்னதானம் போன்ற வைபவங்களும் விமர்சையாக நடந்து வருகின்றது.

அதுபோல், நம்முடைய தமிழ்நாட்டில், எல்லா சம்ப்ரதாயங்களுக்கும், அதிலும், பிரத்யேகமாக, பாகவத தர்மத்திற்கு ஜகத்திற்கே குருவான கோவிந்தபுரத்தில் ஸித்தியடைந்துள்ள ஸ்ரீ பகவந்நாம போதேந்திர ஸ்வாமிகள் அவர்களுடைய அதிஷ்டானத்திற்கு அருகாமையில், எப்பொழுதும் அகண்டமாக, மஹாமந்த்ர கீர்த்தனம் நடைபெற வேண்டும் என்ற ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் பிரேரணையை ஒட்டி, ஸ்ரீ சைதன்ய என்ற நினைவு மண்டபம் ஏற்படுத்தப்பட்டு, அதனுடைய திறப்பு விழா 26.9.2007 அன்று ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களால் கோ பூஜையுடனும், மஹாமந்திர கீர்த்தனத்துடனும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதில், ஸ்ரீ ஜகந்நாத பகவான், ஒரிஸாவில் உள்ள பூரி க்ஷேத்திரத்திலிருந்தே எழுந்தருளப்பட்டு, பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளது. அதுபோல், சைதன்ய மஹாப்ரபுவும், நித்யானந்தரும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார்கள். அங்கு, இனி, மஹாமந்திர கீர்த்தனம் அகண்டமாக நடைபெறும். பக்தர்கள் அனைவரும்,

முடிந்தபொழுதெல்லாம் அங்கு சென்று, அகண்ட நாமகீர்த்தனத்தில் கலந்துகொண்டு, குருவினுடைய அருளுக்கும், பகவானுடைய அருளுக்கும் பாத்திரமாக வேண்டும்.

உலகத்தில் ஆழ்வார்கள், நாயன்மார்களிலிருந்து தொடங்கி எத்தனையோ பேர் பக்தி மார்க்கத்தையும், பாகவத தர்மத்தையும் கடைபிடித்து வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களில், பகவந்நாமா முக்தி தரும் என்று சித்தாந்தம் செய்தவர் நமது பகவந்நாம போதேந்திர ஸ்வாமிகள் மட்டுமே ஆவார். அத்தகைய நமது குருநாதரை உலகமறியச் செய்வது, பஜனை செய்து வரும் நம் ஒவ்வொருவருடைய கடமை ஆகும்'' என்று ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் உரையாற்றினார்கள்.

தொடரும்

**- டாக்டர் ஆ. பாக்யநாதன்**

Sri Hari :

**PRANAMS TO THE LOTUS FEET OF
H.H. SRI SRI MURALIDHARA SWAMIJI**

**Free financial advise at your door steps to maximise secured returns of your hard earned money by investing in ICICI Prudential Life Insurance company products**

*For details contact :*

**N.S. MAHESH BABU**
Sr. Consultant Trainer/Financial advisor

# 16, Welders Nagar, Tanjore Road,
Trichy - 620 008.
email : maheshbabu49638@iciciprupartner.com
Mobile : 98941 76377 Phone : 0431-6451505

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : ஆடி மாதத்தில் கல்யாணம் ஆன தம்பதிகளை ஏன் பிரித்து வைக்கின்றார்கள்?*

பதில் : ஆடி மாதம் என்பது தேவர்களுடைய அந்தி சாயும் நேரம். அந்த நேரத்தில் கர்ப்பம் உண்டானால் அதற்கு அசுரத்தன்மை அதிகமாக இருக்கும் என்பதே அதற்கான காரணம்.

*கேள்வி : கலியில் வேறு எந்த வைதீக காரியங்களும் செய்யாமல் நாமகீர்த்தனம் மட்டும் செய்தால் போதுமா?*

பதில் : வேறு எந்த வைதீக காரியங்களும் செய்யாமல் என்பதை விட, செய்தாலும் ஒரு பலனும் இல்லை என்பதே உண்மை! ஏன் என்றால், வைதீக கார்யங்களை, முழுவதுமாக, முறைப்படி ஒருவரால்கூட செய்ய முடியாது. அப்படியே, ஒருவர் இருவர் செய்தாலும் அதைப்பற்றி நமக்கு என்ன அக்கறை?

நமக்கு, உலகத்தில் உள்ள கோடானு கோடி மக்களுக்கு என்ன வழி என்பதுதான் கவலை. அதற்கு ஒரே வழி 'மஹாமந்திர கீர்த்தனம் மட்டுமே'. மஹாமந்திர கீர்த்தனமே பக்தி தரும், முக்தி தரும், துன்பம் போக்கும், விரும்பியது அளிக்கும். மஹாமந்திர கீர்த்தனம் செய்தே, கிருஹபிரவேசம், கல்யாணம், சீமந்தம், பிறந்த நாள், இறுதிச் சடங்கு, வருடாந்திர திதி எல்லாம் செய்யலாம். ஒரு தீமையும் ஏற்படாது. இப்படி செய்தால், அப்படி நடந்து விடுமோ (அ) இப்படி நடந்து விடுமோ என்று அதைர்யம் அடையக் கூடாது. செய்த பிறகும் பயம் தேவையில்லை. என் மீது பாரத்தை போட்டே செய்யலாம். பிரார்த்தனையும், மஹாமந்திரமுமே இன்றைய உலகத்திற்குத் தேவையானது.

*கேள்வி : கோவில்கள் நம்முடைய அடிப்படை அல்லவா?*

பதில் : அடிப்படையாக இருப்பதால்தான் கோவில்கள் பல உருவாவதை யாரும் தடுக்க முடியாது. உலகத்தில் இன்று ஆஸ்திரேலியா,

அமெரிக்கா, பிரான்ஸ், லண்டன், கனடா மற்றும் பல நாடுகளில் கோவில்கள் தோன்றிவிட்டன. மனிதர்கள் பல மாடி கட்டடங்களில் வாழ ஆரம்பிக்க ஆரம்பிக்க ஒவ்வொரு மாடியிலும் ஒரு கோவில் உண்டானாலும் ஆச்சர்யப்படுவதற்கு இல்லை. கோவிலில் பூஜைக்குத் தேர்ந்தெடுப்பவர்களுக்கு, அவர் அவர்களது தாய் மொழியில் வழிபாடு விதிகளையும், புலால், மது, மாது, போன்றவைகளை விலக்குவதையும் நேர்மை, உண்மை, தூய்மை இவைகளையே வலியுறுத்தியும் பூஜைக்கு நியமிக்கலாம்.

*கேள்வி : இவ்வளவு தாமதமாக நம்முடைய வழிபாட்டு முறைகள் வெளிநாடுகளில் பரவுவதற்கு காரணம் என்ன?*

பதில் : நாம் வெளிநாடு சென்றாலே தீட்டு என்றும், தீண்டத்தகாதவன் என்றும் சொல்லி ஒரு குறுகிய வட்டத்திற்குள் இருந்துவிட்டோம். இன்றும், சிலர் இதை பிடித்துக்கொண்டிருப்பதும் விசித்திரமே.


ஸ்ரீ ஹரி:

**ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் சந்நதி**

மஹாரண்யம் கிராமம், மலைப்பட்டு B.O. படப்பை. P.O. 601 301.
ஸ்ரீ பெரும்புதூர். T.K. காஞ்சி மாவட்டம்

ஸகல மங்களங்களையும் அருளும் வரப்ரஸாதியான மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் சந்நதியில் பக்தர்களின் பிரார்த்தனைகள், ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் காலையில் பெருமாளிடம் விண்ணப்பிக்கப்படுகின்றன.

பக்தர்கள், தங்களது பிரார்த்தனைகளை தபால் தலை ஒட்டிய உறைமீது ''பிரார்த்தனைப் பெட்டி'' என்று குறிப்பிட்டு அனுப்பினால், பிரசாதம் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

பிரார்த்தனைப் பெட்டியில் கண்டிப்பாகக் காணிக்கைகள் எதுவும் செலுத்தக்கூடாது. பிரார்த்தனைகள் மட்டுமே பிரார்த்தனைப் பெட்டியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

## மாதம் ஒரு புத்தகம்

கணேஷ்புரி ஸ்ரீ நித்யானந்தரின் சீடரான ஸ்வாமி முக்தானந்தர் அவர்கள் எழுதியுள்ள அற்புதமான தனித்துவம் வாய்ந்த சுயசரிதை ‘சித்சக்தி விலாஸ்’. எவ்வளவோ மஹான்களின் சுயசரிதைகள்தான் உள்ளனவே! அப்படியிருக்க, ‘சித்சக்தி விலாஸின்’ தனித்துவம் என்ன? என்ற கேள்வி எழலாம். அதன் தனித்துவம் என்னவென்றால், அது ஒரு ஆன்மீக சுயசரிதை. அதாவது சுவாமி முக்தானந்தர் தனக்கு ஏற்பட்ட ஆன்மீக அனுபவங்களை மிகவும் துல்லியமாக, ஒரு குறிப்பேடு போல் பதிவு செய்துள்ளார்.

இது ஆன்ம சாதகர்களுக்கு ஒரு ஒப்பற்ற வழிகாட்டியாகத் திகழ்ந்து வருகிறது. நமது மதத்தில் மரண பயத்திற்கு கொடுக்கப்படும் முக்கியத்துவத்தைப்போல் வேறு எதற்கும் கொடுக்கப்படுவதில்லை. ஏனென்றால், யாரை மரணபயம் உண்மையில் பற்றிக் கொள்கிறதோ, அவரே மரணமிலா பெருவாழ்வை அடைய முற்படுகின்றார். பிறகு அதை அடைந்தும் விடுகிறார். அதனால்தான் ரமண மஹரிஷிகளும் ‘யாருக்கு மரணபயம் ஏற்படுகின்றதோ, அவரைப் போல் பாக்யசாலி உண்டோ?’ என்கின்றார்.

சுவாமி விவேகானந்தர் மேல்நாடுகளுக்கு சென்றபொழுது, அங்கு ஒரு இளவரசர், ‘உங்களைப் பின்பற்றுவதால் நான் எதை அடைவேன்?’ என்று விவேகானந்தரிடம் கேட்க, அதற்கு சுவாமிஜி அவர்கள், ‘நீ என்னுடன் வந்தால் உனக்கு நான் மரணத்தை நேசிக்கக் கற்றுத்தருவேன்’ என்று சொன்னாரல்லவா!

இதைப்போலவே சுவாமி முக்தானந்தரின் ஆன்ம சாதனைக் காலத்தில் அவருக்கும் மரணபயம் ஏற்பட்டதை சித்சக்தி விலாசத்தில் அவர் குறிப்பிடுகிறார்.

‘ஒருநாள் தியானத்தில் ஒரு அதிசயம் நிகழ்ந்தது. எனது கண்கள் தியானத்தில் மேல்நோக்கி நிலைத்து நின்றன. என் கழுத்து, மேல்நோக்கிச் சிறிது தூக்கியபடி நின்றது. ஸஹஸ்ராரத்தில் அத்ருச்யமான பளிங்கமான ஒளியானது ஸஹஸ்ராரம் திறந்து வெளியே சிதறியது. ஒன்றல்ல, இரண்டல்ல, ஆயிரமுமல்ல, கோடிக்கோடியான சூரிய பிரகாசம் சுற்றிலும் ஒளிர்ந்தது. எனக்கு அதைக் காண சக்தியில்லை. என் தைரியம் சுத்தமாக வடிந்தது, அந்த அளவுக்கு அது பிரகாசித்தது. என் தியானத்தை நிறுத்தக்கூடிய சக்தியும் எனக்கில்லை. நான் உட்கார்ந்த இடத்தை விட்டு

எழுந்திருக்க முடியவில்லை. என் ஆசனம் என் ஆளுமைக்குட்பட்டு இல்லை. என் விருப்பப்படி என் கண் இமைகளை திறக்கவோ, மூடவோ இயலவில்லை. தன்னை நோக்கி அதன் ஜ்வாஜல்யம் என்னை இழுத்தது. அதைப் பார்த்தபோது என் உணர்வையிழந்தேன். மீண்டும் கொஞ்சம் உணர்வைப் பெற்றபோது, அழ ஆரம்பித்தேன்.

'ஓ தெய்வமே! ஓ ஸத்குருநாதா! என்னைக் காப்பாற்றுவீர்.' நான் இறப்பதற்குப் பயந்ததால் நான் கத்த ஆரம்பித்தேன். என் சுவாசம் நின்றுவிட்டது. என் மனம் வேலை செய்யவில்லை. என் தேகத்தைவிட்டு என் பிராணன் போவதை உணர்ந்தேன். 'என் பகவானே! ஓ! ஸத்குரு!' நான் கதறினேன். 'ஓம்! ஓம்!' பிறகு என் தேகத்தைப் பற்றிய பிரக்ஞை போயிற்று. மரணம் ஏற்பட்டால் வாயைப் பிளப்பது போலவும் கைகளைத் துவளவிடுவது போலவும் சப்தம் செய்வது போலவும் இவற்றையெல்லாம் செய்துகொண்டு விழுந்துவிட்டேன்.

உணர்விழந்த இந்தப் புரியாத நிலையில் ஒரு மணி நேரமோ, ஒன்றரை மணிநேரமோ விழுந்திருந்த பிறகு, ஒருவன் தூக்கத்திலிருந்து எழுந்திருப்பதைப்போல் எழுந்தேன், சிரித்துக்கொண்டேன். 'இப்போது தான் இறந்தேன். மறுபடியும் உயிரோடு இருக்கிறேனே' மிகவும் அமைதியுடனும் சந்தோஷத்துடனும் அன்புடனும் எழுந்தேன். பரப்பிரும்ம சொரூபத்தை கோடிக்கோடி சூர்யப் பிரகாசமாகப் பார்த்தபோது, நான் மரணம் என்னும் அனுபவத்தைப் பெற்றேன் என்றுணர்ந்தேன். நான் மிகவும் பயந்ததென்னவோ உண்மை! ஆனால், இப்போது மரணம் என்றால் என்ன என்று புரிந்துகொண்டேன். என்னுள் இருந்த பயஉணர்ச்சி முழுவதும் அழிக்கப்பட்டு விட்டது. பயமற்ற தன்மையை பூர்ணமாக நான் பெற்றேன்'' என்று கூறுகிறார்.

மேலும் சுவாமி முக்தானந்தர் சொல்லும்பொழுது, 'எத்தனைக் காலம் ஜபம் செய்தாலும் சரி, எவ்வளவு தவங்கள் புரிந்தாலும் சரி, எவ்வளவு காலம் தியானம் செய்தாலும் சரி, எத்தனை தானங்களை அள்ளி அள்ளி வழங்கினாலும் சரி, எத்தனையோ யாகங்களில் அவிஸ்ஸாக தந்தாலும் சரி, கங்கையில் எத்தனை ஸ்நானங்கள் செய்தாலும் சரி, குருவின் அன்புப்பார்வை உங்கள்பால் திரும்பாமல் எதையும் நீங்கள் அடைய முடியாது' என்று வலியுறுத்துகின்றார்.

**– டாக்டர் ஆ. பாக்யநாதன்**

# மனம் போல் வாழ்வு

*(சென்னையில் 2007 ஜனவரி 4-7 தேதிகளில் நடைபெற்ற 59வது ANCIPS 2007 கருத்தரங்கில் (59th Annual National Conference of the Indian Psychiatric Society) வெளியிடப்பட்ட ஆண்டு மலரில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் ''மனம் போல் வாழ்வு'' கட்டுரை இடம் பெற்றுள்ளது. நாம் அனைவரும் பயன்பெறும் வகையில் அகில இந்திய மனநல கருத்தரங்கின் மூத்த மனநல நிபுணர் டாக்டர் M. திருநாவுக்கரசு அவர்களின் அனுமதியுடன் இங்கே பகிர்ந்துகொள்கிறோம்.)*

*- சைதன்ய மஹாபிரபு நாமபிக்ஷா கேந்திரா*

இன்றைய காலகட்டத்தில் ஆன்மீகம், இறை வழிபாடு போன்றவை மாறிவரும் மனிதனின் நவீனமான வாழ்க்கை முறைகளுக்கும், அதிவேகமாக நிகழ்ந்துவரும் விஞ்ஞான வளர்ச்சிக்கும் எதிர்மறையான விஷயங்கள் என்பது போன்ற ஒரு பரவலான அபிப்பிராயம் நிலவி வருவதைக் காணலாம். இது உண்மைதானா? என்றால் நிச்சயமாக இல்லை. சரியாகப் புரிந்து கொண்டால் எல்லா காலகட்டங்களிலும் எல்லா மனிதர்களின் வாழ்க்கைகளிலிருந்தும் பிரிக்க முடியாத அத்தியாவசியமான ஒன்று ஆன்மீகம் என்பதை உணரலாம்.

மனிதன் என்பவன் மற்ற உயிரினங்களிலிருந்து எந்த விதத்தில் வேறுபடுகின்றான் என்று பார்க்கும்பொழுது, மற்ற உயிரினங்களில் ஓர் அறிவு முதல் ஐந்து அறிவு வரை காணப்படுகின்றது. சுவைத்தல், பார்த்தல், கேட்டல், முகர்தல், உணர்தல் போன்ற ஐந்து இந்திரியங்கள் செயல்கள் பூர்த்தியாகக் கொண்ட மனிதன் மட்டும் அவற்றினுடைய செயல்களை இன்னும் திறன்பட சிந்திக்கும் அறிவாக, ஆறாவது அறிவைக் கொண்டுள்ளான். மனிதன் என்பவன் உடல், அறிவு, மனது (உணர்வு) இவற்றினுடைய ஒரு கலவை.

குழந்தையை, தாய் கருவுற்றது முதல், நவீனமான கருவிகளைக் கொண்டு அதனுடைய உடல் வளர்ச்சியானது மிகவும் உன்னிப்பாக கவனிக்கப்படுகிறது. அந்த கருவிகளின் மூலம், குழந்தையின் ஊனம் கருவிலேயே கண்டுபிடிக்கப்பட்டால் அப்பொழுதே அதை அழித்து விடுகிறார்கள். குழந்தை பிறந்தவுடன், ஒரு குழந்தைநல

மருத்துவர் அந்தக் குழந்தைக்கு பார்வை, கேட்கும் சக்தி எல்லாம் சரியாக உள்ளதா என்பதை ஒருமுறை பார்த்துக் கொண்டு, தற்காப்பு நடவடிக்கையாக காசநோய், போலியோ போன்றவற்றிற்கு தடுப்பூசி போட்டு விடுகின்றார். பிறகு ஐந்து வயதுவரை குழந்தைக்கு மிகவும் சத்தான உணவுகள் கொடுக்கிறார்கள். பிறகு பள்ளிக்கூடத்தில் சேர்த்து அந்தக் குழந்தையின் அறிவைப் பெருக்குவதற்கு முயற்சிகள் எடுத்து, கொஞ்சம் கொஞ்சமாக எந்தத் துறையில் அந்தக் குழந்தைக்கு நாட்டமோ, எந்தத் துறையை எடுத்துக் கொண்டால் அந்தக் காலத்திற்கு ஏற்றாற்போல் அதிகமாகப் பொருள் ஈட்டலாமோ, எந்தத் துறையை எடுத்தால் சமுதாயத்தில் ஒரு நல்ல மதிப்பு கிடைக்குமோ அந்தத் துறையில் ஆர்வத்துடன் ஊக்கப் படுத்தப்படுகிறார்கள். இவை இரண்டுடன்-உடல் ஆரோக்கியம் அறிவு வளர்ச்சி- மனிதனுடைய தேவைகள் முடிந்துவிடுகின்றன என்று நினைக்கிறார்கள். ஆனால், உண்மை என்ன?

இவை இரண்டுடன் மனிதனுடைய தேவைகள் முடிந்து விடுவதில்லை. அதுதான் உண்மை. அப்படியானால் மூன்றாவது தேவை என்ன? அந்த அத்தியாவசியமான மூன்றாவது தேவைதான் மனவலிமை. மனதிற்கு ஏன் அவ்வளவு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்? அதன் ஆற்றல்தான் என்ன என்கின்றீர்களா! இறைவனின் படைப்பிலேயே மிக மிக ஆச்சரியமானது என்ன வென்றால் அது இந்த மனம்தான்.

வெளியில் காணப்படும் பிரபஞ்சத்தை தங்கள் அறிவினால் தீவிரமாக ஆராய்ச்சி செய்து இன்றைய விஞ்ஞானிகள் செவ்வாய் கிரஹத்திற்கு Path finderஐயும் அனுப்பி விட்டார்கள். அன்றாட வாழ்க்கைக்கு உபயோகமுள்ள எவ்வளவு அரிய கண்டுபிடிப்பு களையும் தந்துள்ளார்கள். அதைப்போல் தத்துவவாதிகள் தங்கள் அறிவினால் மட்டும் சிந்தித்து வாழ்க்கை, சமுதாயம் இவற்றைப் பற்றி தம்முடைய புதிய கோணத்தில் தத்துவங்களைக் கொடுத்து உள்ளார்கள். இந்த விஞ்ஞான வளர்ச்சியும் தத்துவங்களும் அறிவுத்திறனால் சாதிக்கப்பட்டவை. ஆனால், மனதின் ஆற்றலோ இதையெல்லாம் விஞ்சி நிற்கின்றது. மனதை ஏதாவது ஒரு பொருளில் ஒருநிலைப்படுத்தி, தங்களுடைய மனோசக்தியை அதிகரித்து, மெஸ்மரிசம் ஹிப்னாடிசம் போன்றவைகளால்

பிறருடைய மனதை ஆக்கிரமித்துக் கொள்பவர்களும் உண்டு. இதற்கும் மேலே சிலர் மனோசக்தியால் ஓடுகின்ற கடிகாரத்தை நிறுத்துவார்கள். மிருகத்தை அடக்குவார்கள். கம்பியை வளைத்து விடுவார்கள். பொருள்களை நகர்த்துவார்கள். இப்படிப் பற்பல. உடல் பலமுள்ள மனிதன் பலமில்லாத மனிதனை தன் வசப் படுத்துவது போல பலவீனமான மனமுள்ளவனை மனோ பலமுள்ளவன் வசப்படுத்தி தான் நினைத்தபடியெல்லாம் பொம்மை போல் ஆட்டி வைக்கின்றான். இவை யெல்லாம் மனோசக்தியால் (Power of the mind) சாதிக்கப்பட்டவை.

மனிதனுடைய உடல், அறிவு போன்றவற்றிற்கு எவ்வளவு கவனம் எடுத்துக்கொள்கிறோமோ, அதைவிட அதிகமாக மனதிற்கு எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், ஒருவன் உடல், அறிவு மட்டும் ஆரோக்கியமாக இருந்து மனதினால் பாதிக்கப்பட்டவனாக இருந்தால் அவன் எதையும் செய்ய முடிவதில்லை. எப்படி யென்றால், ஒருவன் கண் பார்வை இழந்தால் கூட மற்ற அங்கங்களைக் கொண்டு அவனால் செயல்பட முடியும். அதுபோல், அறிவற்றவனாக இருந்தாலும்கூட உடல்உழைப்பைக் கொண்டு ஏதாவது செய்ய முடியும். இளவயது முதலே கேட்கும் சக்தியே இழக்கத் தொடங்கினாலும் பீத்தோவன் (Beethoven) உலகின் தலைசிறந்த இசையமைப்பாளர்களுள் ஒருவராகப் போற்றப்பட வில்லையா? ஸ்டீபன் ஹாக்கிங் (Stephan Hawking) என்பவர் தன் கை விரல்களைக் கூட சரிவர அசைக்க முடியாத ஒரு கொடிய நோயால் தாக்கப்பட்டாலும், உலகின் தலைசிறந்த விஞ்ஞானி என்று பெயரெடுக்கவில்லையா?

ஆனால், மனதளவில் ஒருவன் பாதிக்கப்பட்டால், உடல் வலிமை பொருந்தியவனாக இருந்தாலும், புத்திக் கூர்மையில் நிகரற்றவனாக இருந்தாலும், உலகிலேயே மாபெரும் செல்வந்தனாக இருந்தாலும் அவனால் எந்த ஒரு காரியத்தையும் செய்ய முடிவதில்லை. ஆகவே, இதன் மூலம் மனதிற்கு எவ்வளவு முக்கியத்துவம் தரவேண்டும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

என்னிடம் சிலரை அழைத்து வருவார்கள். பார்ப்பதற்கு மன்மதன்போல் மிகவும் அழகாக இருப்பான். வெளிநாட்டிற்குச் சென்று உயர்ந்த படிப்புகள் படித்து அதில் முதன்மையாகவும்

வீற்றிருப்பான். என்னிடம் அவனுடைய தாயார், 'இவன் வேலைக்குப் போக மாட்டேன் என்கின்றான். எதற்கும் பயப்படுகிறான். எதைச் செய்வதற்கும் தயங்குகிறான். சோர்ந்து சோர்ந்து படுத்துக் கொள்கிறான். தன்னம்பிக்கையற்றவனாகவே உள்ளான்' என்று கூறுவார்கள். இந்திலையிலும் கூட மனிதனின் அந்த அவசியமான மூன்றாவது தேவையைப் பற்றி புரிந்துகொள்ளாமல் கண்டவர்களிடம் அழைத்துச் சென்று, ஏற்கனவே பயந்துள்ள இவனை, மந்திரம், தந்திரம், பேய், பிசாசு போன்றவற்றைச் சொல்லி மேலும் பலஹீனம் செய்து இதிலிருந்து மீள முடியாமல் செய்துவிடுகிறார்கள்.

ஆரம்பத்தில், இந்த மனோநோயை பாதிக்கப்பட்டவர் களாலேயே உணர முடியும். ஆனால், மருந்துவரிடம் சென்றால் பைத்தியம் என்பாரோ, மேலும் சமுதாயம் என்ன நினைக்குமோ என்று தவிர்த்தால் இவை அதிகமாகும்பொழுது மற்றவர்களாகவே இவர்களை மருந்துவர்களிடம் அழைத்துச் செல்வார்கள். மேலும், நவீன மருத்துவத்தைப் பற்றி அறியாத பல அரைகுறை மனிதர்கள் இத்தகைய மருந்துகளுக்கு பக்கவிளைவுகள் அதிகம் என்று வேறு சொல்லிவிடுவார்கள். ஆகவே, மருத்துவரை அணுகுவதற்கு இதன் பொருட்டு பயப்படுபவர்களும் உண்டு. அந்த நிலையில் இவற்றிற்கான மருத்துவ சிகிச்சையும் நேரமும் அதிகமாகவே இருக்கும். குணமடைவதற்கான காலமும் விரிவாகும்.

உடலுக்கு எப்படி தலைவலி, ஜலதோஷம் போன்ற சிறிய நோய்களிலிருந்து, புற்றுநோய், சிறுநீரகக்கோளாறு போன்ற பெரிய நோய்கள் வரை உள்ளனவோ, அதுபோல், மனதிற்கும் நோய் உண்டு என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நம்முடைய ஆயுர்வேத நூல்களில் இவற்றைப் பற்றி ஏற்கனவே கூறியுள்ளார்கள். சரீரத்திற்கு வரும் நோயை வியாதி என்றும் மனதிற்கு வரும் நோயை ஆதி என்றும் கூறியுள்ளார்கள். மேலும், ஸ்ரீமத்பாகவதத்தில் ஒரு ஸ்லோகத்தில் கலியுகத்திலே மனோநோயால் பீடிக்கப் பட்டவர்கள் அதிகமாக இருப்பார்கள் என்று கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து மனதிற்கும் நோய் உண்டு என்று நம் மதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை உணரலாம். அப்படியானால், மனதை எப்படி ஆரோக்கியமாக வைத்துக் கொள்வது? மனம் எந்தக் காரணங்களால் தன்னுடைய ஆரோக்கியத்தை இழக்கின்றது

என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். சரீரத்திற்கு ஒத்துக் கொள்ளாத ஆகாரம் நீர், காற்று, இருப்பிடம் சரீரத்தினுடைய ஆரோக்கியத்தை பாதித்துவிடுவது உறுதி. அறிவிற்கு உதவாத உபதேசங்களும், நூல்களும் நம்மை அறிவிழக்கச் செய்வதும் உறுதி. அதுபோல், மனதிற்கும், ஆரோக்கியம் கொடுக்கும் விஷயங்கள், ஆரோக்கியத்தைக் கெடுக்கும் விஷயங்கள் என்று உண்டு. மேலும், இன்றைய காலகட்டத்தில் மனதினுடைய ஆரோக்கியம் பற்றிய கவனம் அதிகமாகத் தேவைப் படுகின்றது. ஏனென்றால், இன்றைய மக்கள்தொகைப்பெருக்கம், சமூக அமைப்பு, விஞ்ஞானத்தின் வளர்ச்சி ஆகியவை, மனிதனுடைய வாழ்க்கையை மிகவும் சவால் மிக்கதாவும், கடினமானதாகவும் ஆக்கிவிட்டது. அதற்குத் தகுந்தாற்போல் எதிர்பார்ப்பு, ஏமாற்றம், போட்டி, பொறாமை, நஷ்டம், துக்கம், விபத்து, ஆபத்து, இயந்திரத்தனமாக வாழ்க்கையென்று எல்லாமே அதிகமாகிக் கொண்டிருக்கின்றது. இவற்றையெல்லாம் ஒரு மனிதன் மனதினால்தான் எதிர்கொள்ள வேண்டும். ஆகவே வாழ்க்கையில் உளள் பிரச்சினைகளை திறம்பட எதிர்கொள்ள வேண்டிய அளவிற்கு மனதை பக்குவமுள்ளதாக மாற்றிக்கெள்ள வேண்டும்.

இந்த மனதை எப்படி அவ்வாறு மாற்றுவது என்கின்றீர்களா? மிகவும் சுலபம். இந்த மனது எப்படி இருப்பதாக அந்த மனதை நம்ப வைக்கின்றீர்களோ, அப்படியே அது ஆகிவிடும். இதுதான் மனதினுடைய விசித்திரமான தன்மை. மனோசக்தியை இழக்கக் கூடாது என்பதை வலியுறுத்தும் ஒரு கதை, அந்தக் காலத்திலேயே மஹாபாரதத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

மஹாபாரத யுத்தத்தில், சல்லியன் என்ற அரசன் கர்ணனுக்கு தேரோட்டியாக இருந்தான். யுத்த சமயத்தில் தேரோட்டியான சல்லியன், கர்ணனிடம், அர்ஜுனனின் பெருமைகளையும் அவனைப் பற்றிய புகழ்ச்சிகளை மட்டுமே திரும்பத் திரும்பப் பேசினான். அத்துடன் நின்றுவிடாமல், கர்ணனை மிகவும் இகழ்ந்தும் பேசினான். கர்ணனைப் பார்த்து, ‘‘ஒரு மான், பெரும் சக்தி படைத்த சிங்கத்தை சண்டைக்கு அழைப்பதுபோல், இப்பொழுது நீ அர்ஜீனனை போருக்கு அழைக்கின்றாய். தாயின் மடியில் படுத்திருக்கின்ற ஒரு சிறிய குழந்தை, வானத்திலே இருக்கும்

சந்திரனைப் பார்த்து தன்னால் அதைப் பிடித்து விடமுடியும் என்று எண்ணுவதுபோல், நீ அர்ஜுனனை வீழ்த்தி விடமுடியும் என்று கனவு காண்கிறாய். ஒரு புலியைக் கண்டு நாய் குரைப்பதைப்போல் அர்ஜுனனைப் பார்த்து நீ குரைக்கின்றாய். அர்ஜுனனை நேரில் சந்திக்காத வரையில்தான் நீ உன்னை வீரனாக நினைத்துக்கொள்ள முடியும். என்றுமே நீ நரிதான். அர்ஜுனன் சிங்கம்தான். அவன் பூனை என்றால் நீ எலி. அவன் யானை என்றால் நீ முயல். அர்ஜுனனிடம் தோற்பது உறுதி. உனக்குப்போய் தேரோட்டியானது எனது மாபெரும் துரதிருஷ்டம்'' என்று திரும்பத் திரும்ப கர்ணனிடம் சொல்லி மனதளவில் அவனுடைய சக்தியை பெரிய அளவில் இழக்கச் செய்தான். இதனால் அர்ஜுனனை எதிர்த்து கர்ணனால் மிகுந்த வீரத்துடன் யுத்தம் செய்ய முடியாமல் போயிற்று. (மஹாபாரதம் கர்ணபருவம்)

இப்படி, நம் புராணங்களிலேயே பல இடங்களில் மனோ தத்துவம் பேசப்படுகின்றது. மனதினாலேயே தீர்மானிக்கப்பட்ட ஒரு விஷயமாக இருப்பதால்தான் ஒருவன் 'மனிதன்' என்று அழைக்கப் படுகின்றான். நமது திராவிட மரபிலே மனிதர்களை 'உன் மனம் போல் வாழ்' என்று வாழ்த்தும் ஒரு பழக்கமும் இருந்துவருகின்றது. அதாவது, உன் மனம் போல்தான் உன் வாழ்க்கையும் அமையும் என்பதே இதன் பொருள்.

மனம், பழக்கத்திற்கு அடிமையாகக்கூடிய ஒன்று; கட்டளைக்கு அடிபணியாத ஒன்று. உதாரணமாக ஒரு மனிதனைப்பார்த்து 'கை தட்டு' என்றால் தட்டிவிடுவான். ஆனால் 'அழு' என்றால் அழமுடியாது. அழுகை வருவது போல் ஒரு துயரத்தை அவன் மனம் உணர்ந்தால்தான் அவன் அழுவான். அதாவது, அவனுடைய மனதில் உள்ள உணர்வுகளை தூண்டுவதற்கு வெளியிலிருந்து ஒரு விஷயம் வேண்டும். நல்ல உணவினுடைய வாசனையை முகர்வதாலேயே பசி தூண்டப்படுகின்றது. ஆபாசப் படங்களைப் பார்ப்பதால் காமம் தூண்டப்படுகின்றது. மண்டை ஓடு, கோரமான சப்தம் இவற்றினால் பயம் தூண்டப்படுகின்றது. இதுபோல், மனதில் உள்ள உணர்வுகளைத் தூண்டுவதற்கு வெளியிலிருந்து ஒரு உந்துதல், Triggering factor தேவைப்படுகின்றது. அப்படிப்பட்ட மனதில் ஆற்றல் பெருகுவதற்கும், சக்தி நிரம்புவதற்கும், அமைதி

நிலவுதற்கும், ஆனந்தம் பொங்குவதற்கும் இன்றியமையாத உந்துதல் Triggering factor தான் ஆன்மீகம். எப்படி என்று கேட்கின்றீர்களா?

உண்மையில் ஆன்மீகம் என்பது பகுத்தறிவிற்கும், அறிவியல் வளர்ச்சிக்கும் நவீன சமுதாய முறைகளுக்கும் மாறான ஒரு விஷயமே அன்று. அது எல்லாவற்றிலும் பிரிக்கமுடியாதபடி கலந்து பின்னிப்பிணைந்துவிட்ட ஒன்று.

ஏனென்றால், இறைவனை மறுப்பவன், ஏற்பவன் என்று இரண்டு நபர்கள் உலகத்தினிடையே கிடையாது. எறும்பு முதல் மனிதன் வரை எல்லோரும் ஆனந்தத்தையே நாடுகிறார்கள். அந்த ஆனந்தமும் துக்கக் கலப்பில்லாததாகவும், நிரந்தரமானதாகவும் இருக்க வேண்டும் என்றே விழைகின்றார்கள். எறும்பு அந்த ஆனந்தத்தை சர்க்கரையில் தேடுகின்றது. திருடன் அதே ஆனந்தத்தை திருட்டில் தேடுகின்றான். உலகமக்கள், புகழிலும், பதவியிலும், பொருளிலும், குடும்பத்திலும், நட்பிலும் தேடுவதும் அதே ஆனந்தத்தைத்தான். இறைவனை மறுப்பவனும், இறைவனை ஏற்பவனும்கூட தேடுவது அதையே. அந்த துக்கக்கலப்பில்லாத நிலையான ஆனந்தத்தை நிலையற்ற உலக விஷயங்களில் தேடாமல் சரியான இடத்தில் தேடுவது தான் ஆன்மீகம். இறைவன் என்பவன் ஒரு ஆறடி உருவம் அல்லன். நிலையான ஆனந்தம்தான் இறைவன். இறைவனை ஏற்காதவன்கூட ஆனந்தத்தைத் தேடுகிறேன் என்று நினைத்துக்கொண்டு இறைவனைத்தான் தேடிக் கொண்டு இருக்கிறான். இறைநெறியாளர்கள் அந்த ஆனந்தம் எங்கு உள்ளது என்றும், எப்படி அடைய வேண்டும் என்பதையும் சரியாக அறிந்தவர்கள். மற்றவர்கள் அதை அடைய வழி தெரியாமலும், இருக்கும் இடம் தெரியாமலும் தவிக்கின்றார்கள்.

உலகம் முழுவதிலும் உள்ள பலர், பஞ்சபூதங்கள் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்க, நம்முடைய நாட்டு ரிஷிகளோ பார்வை, புலன்கள் எல்லாவற்றையும் உட்புறமாக இருத்தி, மனதைப் பற்றியும், ஆனந்தத்தைப் பற்றியும், இறைவனைப்பற்றியும் பல உண்மைகளையும் ஆற்றல்களையும் கண்டறிந்தனர். சுகம், துக்கம் இருண்டும் புறத்தில் உள்ள எந்த விஷயத்திலுமில்லை. மனதைப்

பொறுத்த ஒரு விஷயமே என்பது அவர்களுடைய முடிவு. இதை ஒரு சிறிய உதாரணத்தால் புரிய வைக்க வேண்டுமெனில், பெரிய பங்களா, நவீனமான கார், அன்பான குடும்பம், நிறைவான செல்வம் என்று எல்லாவித வசதிகளும், போகங்களும் உள்ளவன்கூட, மது அருந்திவிட்டு, தன்னை மறந்த நிலையில், எண்ணங்கள் ஒடுங்கிய மன மயக்கத்தில் இருப்பதைத்தான் விரும்புகின்றான். இதிலிருந்தே ஆனந்தம் என்பது மனதைப் பொறுத்ததே என்பது தெளிவாகின்ற தல்லவா?

மேலும் ஒரு படி சென்றால், நம் மதத்தின்படி, மனம் என்ற ஒரு பொருளே இல்லை. எண்ணங்கள்தான் மனது. Other than thoughts there is no mind. எவ்வளவிற்கு எவ்வளவு எண்ணங்கள் வேகமாகத் தோன்றுகின்றதோ, அவ்வளவிற்கு அவ்வளவு மனது தன் வலிமையை இழக்கின்றது. எவ்வளவிற்கு எவ்வளவு எண்ணங்கள் குறைகின்றதோ அவ்வளவிற்கு அவ்வளவு மனவலிமை பெருகுகின்றது: ஆனந்தம் ஏற்படுகின்றது. இதைப் புரிந்துகொள்வது மிகவும் சுலபம். நாமேகூட அன்றாட வாழ்க்கையில் எண்ணங்கள் மேன்மேலே அலை மோதினால் மனக்குழப்பம் (Confusion) ஏற்பட்டு வருந்துகின்றோம். எண்ணங்களில் ஓட்டம் குறையும் பொழுது மனசாந்தி ஏற்பட்டுவிட்டது என்று மகிழ்கின்றோம். எண்ணங்களின் ஓட்டம் ஓரளவிற்கு ஒடுங்கும் தூக்கம், போதை மயக்கம் போன்ற நிலைகளில் சந்தோஷம் உள்ளது என்பது அனைவரும் ஒப்புக் கொள்ளும் விஷயம் தானே?

அப்படியிருக்க, எண்ணங்களே இல்லாத நிலை, அதாவது, மனதே அழிந்துவிட்ட நிலை என்ற ஒன்று இருந்தால், அதிலுள்ள பேரானந்தத்தைப் பற்றி பேசவும் முடியுமோ? அந்த பேரானந்த நிலையே இறைவன்: ஆத்மா: ஆன்மீகத்தின் முடிவு. அந்த இறுதிநிலையை அடைய படிப்படியாக வழங்கப்படும் பயிற்சியே பூஜை, ஜபம், தியானம் போன்ற ஆன்மீக சாதனைகள்.

உடலுக்கும் அறிவிற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் நாம் மனதிற்கும் முக்கியம் கொடுக்க வேண்டும் என்று ஏற்பட்டதே தெய்வ வழிபாடு. அந்த மனம் சோர்வு அடையாமல் எப்போதும்

புத்துணர்வுடன் இருக்க வேண்டும் என்பதற்காகவேதான் இசை, நாட்டியம், கோவில், கலை, கவிதை, நாடகம், உற்சவம், பண்டிகைக் கொண்டாட்டங்கள் போன்றவைகள். மனதிற்கு ஓய்வு வேண்டும் என்பதற்காக இறைவன் தந்துள்ள வரப் பிரசாதமே உறக்கம்.

ஆனால், இவற்றைப் பற்றிய பூரணமான அறிவு இல்லாமல் ஆன்மீக உபதேசத்தை ஆரம்பித்துவிடுவதால் தான் பல கோளாறுகள் ஏற்படுகின்றன. புத்தர் முதலில் கடுமையாக தியானம் செய்ய ஆரம்பித்தார். உடனே தேவர்கள் சிலர் அவர் முன்பாகத் தோன்றி, வீணையைக் கடுமையாக மீட்டினால் தந்திகள் அறுந்து விடும். மெதுவாக மீட்டினால் இசையே வராது. மிதமாக மீட்டினால் மட்டுமே இனிய இசை வரும்'' என்று கூறினர்.

புத்தர், தேவர்கள் அவ்வாறு குறிப்பால் உணர்த்தியதன் உண்மையைப் புரிந்துகொண்டு, எடுத்த எடுப்பிலேயே மிகவும் தீவிரமாக தியானம் செய்யாமல், மெல்ல தீவிரத்தை அதிகரித்து, சீராக தியானித்து இறுதியில் பேரானந்த நிலையை அடைந்தார்.

யானையினுடைய தும்பிக்கை எப்பொழுதும் ஆடிக்கொண்டே இருக்கும். அதை நிறுத்தவேண்டுமெனில் யானைப்பாகன் ஒரு சங்கிலியை அதனிடம் கொடுப்பான். அந்த சங்கிலியை ஆதாரமாகப் பிடித்துக்கொண்டு, யானை தும்பிக்கையை ஆட்டாமல் நிற்கும். அதுபோல், எப்பொழுதும் அலைந்தே பழக்கப்பட்ட மனதிற்கு பூஜை, ஜபம், தியானம் போன்ற ஆன்ம சாதனைகளைக் கொடுத்து மெல்ல மெல்ல எண்ணங்களை ஒடுக்கி, ஒருமுகப்படுத்தி இறுதியில் எண்ணங்களற்ற மனம் அழிந்த அந்த நிரந்தரமான பேரானந்த நிலைக்கு அழைத்துச் செல்வதே ஆன்மீகம். அந்த நிலையைத்தான் நமது பெரியோர்கள் ''சும்மாயிருக்கும் சுகமே'' என்று பாடியுள்ளார்கள்.

ஒரு மனிதனுக்கு ஏதோ ஒரு விட்டமின் தேவை என்றால் அதை ஒரே நாளில் ஒரு அரை கிலோ சாப்பிடக் கூடாது. பெரிய பாடங்களை சிறிய வயதில் திணிக்கக் கூடாது என்பதுபோல் மனதில் பக்குவத்தைப் பொறுத்து தகுதியான பயிற்சிகளை மேற்கொண்டு சீராக செய்து வந்தால், ஆனந்தமாக வாழமுடியும் என்பதே ஆன்மீகம் கண்ட உண்மை.

### நால்வகை யுகங்களிலும் ஆராயப்படும் சிறப்பு

*பறவாப் பூவைப் பூவினோயே!*
*அருள் குடையாக, அறம் கோலாக,*
*இரு நிழல் படாமை மூ-ஏழ் உலகமும்*
*ஒரு நிழல் ஆக்கிய ஏமத்தைமாதோ;*
*பாழ் என, கால் என, பாகு என, ஒன்று என,*
*இரண்டு என, மூன்று என, நான்கு என, ஐந்து என,*
*ஆறு என, ஏழு என, எட்டு என, தொண்டு என,*
*நால்வகை ஊழி எண் நவிற்றும் சிறப்பினை;*

### நால்வகை வியூகம்

*செங் கட் காரி! கருங் கண் வெள்ளை!*
*பொன் கட் பச்சை! பைங் கண் மா அல்!*

### பல திறப் பெயரியல்புகள்

*இட வல! குட அல! கோவல! காவல!*
*காணா மரப! நீயா நினைவ!*
*மாயா மன்ன! உலகு ஆள் மன்னவ!*
*தொல் இயல் புலவ! நல் யாழ்ப் பாண!*
*மாலைச் செல்வ! தோலாக் கோட்ட!*
*பொலம் புரி ஆடை! வலம்புரி வண்ண!*
*பருதி வலவ! பொருதிறல் மல்ல!*
*திருவின் கணவ! பெருவிறல் மள்ள!*
*மா நிலம் இயலா முதல் முறை அமையத்து,*
*நாம வெள்ளத்து நடுவண் தோன்றிய*
*வாய்மொழி மகனொடு மலர்ந்த*
*தாமரைப் பொருட்டு நின் நேமி நிழலே!*

## கடவுள் வாழ்த்து

*கடுவன் இளஎயினனார் பாட்டு*
*பெட்டனாகனார் இசை*
*பண்ணுப் பாலையாழ்*

இதன் திரண்ட பொருட்சுருக்கம் வருமாறு:

**திருமாலிடம் இருந்து தோன்றியன**

மாயோய்! வணங்கியவர்களது பிறவிநோயைப் போக்கும் திருவடியை உடையவனே! நீலமணி போன்ற திருமேனி உடையாய்! தீ, காற்று, ஆகாயம், நிலம், நீர் என்னும் ஐம்பூதங்களும் சூரிய சந்திரரும் வேள்வித் தலைவனும் செவ்வாய் முதலிய ஐங்கோள்களும் அசுரரும் பன்னிரண்டு சூரியரும் அட்டவசுக்களும் பதினொரு உருத்திரர்களும் அசுவனி தேவர்களாய மருத்துவர் இருவரும் யமனும் அவனுடைய ஏவலாளாகிய கூற்றுவனும் 21 உலகமும் அவற்றில் உள்ள உயிர்க்கூட்டமும் எல்லாம் நின்னிடத்திருந்து தோன்றிப் பரந்தவை என்று வேதம் கூறுவது அறிந்து யாமும் கூறினோம்.

தாமரை மலரில் தோன்றிய பிரமனும் அவனுக்குத் தந்தையும் நீ என்று அருமறை கூறும். முனிவரும் தேவரும் பாடும் வகை தேவர்களிடமிருந்து அமுதத்தை கொணர்ந்து தன் தாயின் துன்பத்தைத் தீர்த்த கருடனை வாகனமாக உடையாய்! அதனையே கொடியாகவும் உடையாய்! நின் திருவடிகளை வணங்காதவரும் உளரோ? கீழேழ் உலகமும் அனந்த திருவடியை உடையாய். ஊழிக்காலத்து கடலில் அழுந்திய நில மகளை, அழகிய வராகமாகிக் கொம்பினால் எடுத்தாய்! மேகம் பொழிகின்ற ஊழி மழை நீரை அன்னச் சேவலாகி நின் சிறகினால் வறளச் செய்தாய்! என்று முனிவரும் தேவரும் நின்னைப் புகழ்வர்.

கேசி என்னும் அசுரனை அழித்தவனே! எண்ணிறந்த நின்புகழ் போலக் கைகளும் பல அமரர்க்கு அமுதளித்த கையினை உடையாய்! அளவிலாத திருமேனிகளை உடையாய்! நீயே உணரின் அல்லது நின்னைப் பிறரால் உணரல் ஆகாது.

## வனப்பும் வலியும்

வேத முதல்வனே! ஆகமங்களாலும், மனத்தாலும், அகங்காரத்தாலும், உணர்வாலும் வனப்பும் எல்லையும் அறியப் படாதவன் நீ. தேவர்களுக்கு முதல்வன் நீ! அவுணர்களுக்கும் முதல்வன் நீயே! உனக்குப் பகைவர், நண்பர் என்று யாருமே இல்லை; ஆதிசேடனைத் தன் வாயிற் கவ்விய கருடன் செருக்கடங்கிக் கதறுதற்குக் காரணமாகியவனும் கால முதல்வனும் நீயே.

**சாமவேதம் கூறும் வகை:**

நின் இயல்மை சாமவேதம் விளங்க அறிவித்தலின் அறிந்தோம். தீயில் வெம்மை, மலரில் மணம், கல்லில் மணி, சொல்லில் வாய்மை, அறத்தில் அன்பு, மறத்தில் வன்மை, வேதத்துள் உபநிடதம், பூதத்துள் ஆகாயம், ஞாயிறில் ஒளி, திங்களின் குளிர்ச்சி, வியாபிகமும் வியாப்பியமும் நீ, உறைதலும் உறையும் இலை; நீ பிறவாப்பிறப்பில்லை; நின்னைப் பிறப்பித்தவரும் இல்லை.

ஊழி முதல்வன் காயாம் பூ நிறமேனி உடையாய்! அருளே குடை, அறம் காம்பு என 21 உலகங்களையும் காப்பவன் நீ. தத்துவம் இருப்பத்தைந்தாலும் ஆராயப்படும் பெருமை உடையவன் நீ.

**நால்வகை வியூகம்**

வாசுதேவன், சங்கருடணன், பிரத்தியும்நன், அநிருத்தன் என்று நால்வகையாய் அழைக்கப்படுவாய்.

தோத்திரம் : இடவல! குடவல! கோவல, அலப்படை உடையாய், அறியப்படாத மரபினை உடையாய்! அன்பரது நினைவின்கண் உள்ளவனே! என்றும் நிலைபெற்றவனே! மன்னவ! புலவ! பாண! வனமாலீ! சங்கேந்தியவனே! பீதாம்பரதாரீ! வலம் புரிவண்ணா! பருதிவலவ! மல்ல! திருவின் கணவ! வீர!

**நிறைவுரை**

நிலம் தோன்றாத ஆதியில் பெருவெள்ள நடுவில் பிரமனோடு கொப்பூழின்கண் தோன்றிய தாமரையை உடையவனாகிய நினது சக்கரமே உலகிற்கு நிழலாவது. அந்நிழலின்கண் இன்பமார்ந்திருக்க அருள்புரிவாயாக.

(தொடரும்)

# பாலகர்களுக்கு ஒரு கதை

ஒரு சாது இருந்தார். அவர் இறைவனை உணர்ந்தவர். அப்படிப்பட்டவர்களின் முகம், குரல், நடை, உடை, பாவனை ஆகியவையே அவர்கள் இறைவனை அறிந்தவர் என உலகுக்கு உணர்த்தி விடும். மலர் மலர்ந்ததும் அதுவா உலகிற்கு, நான் மலர்ந்து விட்டேன் என கூறுகிறது? தன்னாலேயே தேனீக்கள் மதுவை எடுக்க மலர்களை சூழ்ந்துகொள்கின்றனவே! அதுபோல், உள்ளத்தில் தெய்வீகம் மலர்ந்தால் தானாகவே மக்கள் அப்படிப்பட்டவர்களிடம் ஈர்க்கப்படுவார்கள். அதுபோல், அந்த சாதுவிடம் மக்கள் வந்து கூடினர். நாளுக்கு நாள் அவர் புகழ் பரவியது. அவரை சிலர் ஞானி என்றனர். சிலர் பக்தர் என்றனர். சிலர் சாது என்றும், சிலர் மஹாத்மா என்றும் சிலர் சித்தர் என்றும், யோகி என்றும் புகழ்ந்தனர். சாதுவோ இதையெல்லாம் கண்டு சிறிதும் சலனம் அடையவில்லை. மேலும், இந்தக் கூட்டமும் ஆரவாரமும் அவருக்கு சிறிதும் பிடிக்கவில்லை. தனிமையை விரும்பினார். அனைவரிடமும் சொல்லிவிட்டு தனியாக செல்லலாம் என்றால் அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள் என நினைத்தார்.

ஒரு நாள் ஒருவருக்கும் தெரியாமல் காட்டுவழியாக நடந்து வேறு ஒரு ஊருக்குச் சென்றுவிட்டார். அங்கு அவரை யாருக்கும் தெரியாது. கிழிந்த உடையும், அழுக்கு உடையும், தாடி, மீசையும் அவரை ஒரு பிச்சைக்காரன் போன்று காட்டியது. மேலும், அவர் தனக்குத்தானே பேசிக்கொண்டிருந்தார். எனவே, அவரை பைத்தியம் என முடிவு கட்டினர். சிலர், பரிதாபப்பட்டு உணவு தந்தனர். சிலர் பரிஹாசம் செய்து கல்லால் அடித்தனர். அவர் எதற்கும் கவலை இல்லாமல் சந்தோஷமாக இருந்தார்.

ஒரு நாள், பழைய ஊரைச் சேர்ந்த வியாபாரி ஒருவன் இந்த ஊருக்கு வந்தான். வீதியில் இந்த சாதுவைக் கண்டான். மக்கள் அவரைக் கேலி செய்வதைக் கண்டு வெகுண்டு அவர்களைத் தடுத்து நிறுத்தி விட்டு சாதுவை வணங்கினான். ஜனங்கள் அந்த வியாபாரிக்கு புத்தி கோளாறு என்றனர். அந்த வியாபாரி இவர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். எத்தனையோ பேருக்கு அருள் செய்து நல்லது செய்துள்ளார். சிறந்த ஞானி. திடீரென்று மக்கள் தொல்லை தாங்காமல் தனிமையை விரும்பி ஒருவரிடமும் கூறிக்கொள்ளாமல் ஊரை விட்டுச் சென்றுவிட்டார். இங்கு இவரைக் கண்டேன் என்று கூறினான். இதைக் கேட்ட மக்கள் பயந்துவிட்டனர். உடனே அவரை வணங்கி மன்னிப்பு கேட்டனர். அப்போதும் அவரிடம்

எந்த மாற்றமும் இல்லை. மறுநாளிலிருந்து அவரை பூஜை செய்ய ஆரம்பித்தனர். அவர், முன்புபோலவே மக்களிடமிருந்து தப்பிக்க வேண்டும் என நினைத்து இரவோடு இரவாக கிளம்பி வேறு ஊரை அடைந்தார். புதிய ஊரில் ஒரு சத்திரத்தில் படுத்திருந்தார். பக்கத்தில் யாரோ படுத்திருந்தார்கள். அவரும் படுத்து உறங்கினார். மறுநாள் காலை இரண்டு சிப்பாய்கள் அவர் எதிரில் நின்றனர். ''உன்பக்கத்தில் படுத்திருப்பவனை நீ கொலை செய்திருக்கிறாய். உன்னை மன்னவன் முன் அழைத்துச் செல்வோம்'' என்றனர். சாதுவிற்கு தன் பக்கத்தில் படுத்திருந்தது சவம் என தெரியாது. நீதிபதிக்கு முன் அவர் நிறுத்தப்பட்டார். எந்த கேள்விக்கும் பதில் கூறாமல் மௌனமாக இருந்துவிட்டார். ஏதோ தனக்குத்தானே பேசிக்கொண்டார். நீதிபதி இவர் தலையை வெட்டுமாறு தீர்ப்பளித்தார். அவரை பலர் கூடிய மைதானத்தில் நிறுத்தி தலையை வெட்ட ஏற்பாடாகியது. நீதிபதி அந்த சாதுவிடம், உனக்கு ஏதாவது கடைசியாக ஆசை இருந்தால் சொல், நிறைவேற்றுகிறோம்'' என்றார்.

அந்த ஞானியும் சிறிது நேரம் பிரார்த்தனை செய்வதற்கு தன்னை அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டார். கண்களை மூடி பிரார்த்தனை செய்தார். அப்போது திடீரென்று கூட்டத்தில் இருந்து ஒருவன் ஓடிவந்து நீதிபதியிடம், ''ஐயா! இந்தக் கொலையை நான் தான் செய்தேன். கொலையுண்டவனுக்கும் எனக்கும் ஏற்கனவே தகராறு உண்டு. அதனால் கொலை செய்தேன். தவறு செய்யாத ஒருவனுக்கு தண்டனை அளிப்பதை என் மனசாட்சி ஏற்றுக் கொள்ளவில்லை'' என்று கூறி அழுதான்.

நீதிபதி ஞானியை விடுவித்துவிட்டார். ஞானி இறைவனிடம் மனமுருகிப் பிரார்த்தனை செய்துகொண்டதால் தான் அவருக்கு இப்படி காப்பாற்றுதல் கிடைத்தது என நினைத்தார். அவர் ஞானியை அழைத்து, ''நீங்கள் நீதி ஸ்தலத்திலும் தண்டனையின் போதும் மௌனம் சாதித்தீர்கள்! இறைவனிடம் என்ன ப்ரார்த்தனை செய்து கொண்டீர்கள்? உங்களுக்கு எப்படி காப்பாற்றுதல் கிடைத்தது'' என்று கேட்டார்.

ஞானி நீதிபதியிடம், ''நான் பிரார்த்தனை செய்துகொண்டது உண்மை. ஆனால், அது என்ன பிரார்த்தனை தெரியுமா? இறைவா! நீ எந்த அளவு என்னை துன்புறுத்தினாலும் நான் உன்னை நேசித்துக் கொண்டே இருப்பேன்! அதற்கு நீ அருள வேண்டும் என்று தான் வேண்டிக் கொண்டேன்'' என்றார்.

இன்பம், துன்பம், புகழ்ச்சி, இகழ்ச்சி இவை எதைப் பற்றியும் கவலைப்படாமல் இறைவனிடம் தூய அன்பு செலுத்துபவர்கள் அன்றோ மஹாத்மாக்கள்!

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

*(சென்ற இதழ் தொடர்ச்சி)*

சந்த்ரசசி, கௌர்-நிதாயிக்கு ஒரு தாயைப் போல் சேவை செய்யலானாள். ஒருமுறை, அவள் பிரசாதம் செய்துகொண்டிருந்த போது அவளுக்கு மாதவிலக்கு ஏற்பட்டுவிட்டது. இக்காலங்களில் பகவத் சேவை செய்யக்கூடாதல்லவா? இதனால், அவள் மிகவும் வேதனை அடைந்தாள். மிகவும் வருத்தத்துடன் அவள் சற்று கண் அயர்ந்தபோது, அவளுக்கு கனவு போன்ற ஒரு காட்சியில் கௌர்-நிதாய் தோன்றினர்.'' ''ஏன் வருத்தப்படுகிறாய்? நீ எங்கள் தாய் தானே? ஒரு சாமான்ய தாய் தன் குழந்தைகளுக்கு என்னென்ன செய்வாளோ, அதையெல்லாம் நீ எங்களுக்குச் செய்யலாம். மேலும், இனிமேல் உனக்கு இந்த கஷ்டம் வராமலே போகட்டும்'' என்று கூறி மறைந்தனர். இச்சம்பவத்திற்குப் பிறகு சந்தரசசிக்கு, மாதவிலக்கு ஏற்படவே இல்லை.

இச்சம்பவத்தின்போது, அவளுக்கு இருபது வயதுதான் ஆகியிருந்தது. தனியாக அவள் அந்தக் கோயிலில் ஒரு பாபாஜியுடன் இருந்தது ஊர் மக்கள் மனதில் சந்தேகத்தைக் கிளப்பியது. அவர்கள், மனம் போனபடியெல்லாம் பேச ஆரம்பித்துவிட்டார்கள். இதைக் கேட்ட சந்த்ரசசி, மிகவும் வேதனைப்பட்டாள். ஒருநாள், அவள் கௌர்-நிதாயியின் முன் இதைக் கூறி அழுதாள். அன்றிரவு, சந்த்ரசசி கனவில் கௌர்-நிதாயி தோன்றி, 'அம்மா! நாம் ப்ருந்தாவனம் செல்வோம்!'' என்று கூறினர்.

உடனே, சந்த்ரசசி, பலராமதாஸ்பாபாவுடன் ப்ருந்தாவனத்திற்குப் புறப்பட்டார்கள். அவர்கள் படகில் பயணித்தார்கள். அவர்கள் ப்ருந்தாவனம் வந்தடையும்போது, நாடியாவைச் சேர்ந்த 'பக்தா' எனும் பக்தை, யமுனையில் நீராடிக்கொண்டிருந்தாள். கௌர்-நிதாயியைக் கண்டு அவள் மிகவும் மகிழ்ச்சியடைந்தாள். அவள், அவர்கள் அனைவரையும் தன்னுடன் பனகண்டியிலுள்ள தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்றாள். அங்கேயே தங்கிக்கொண்டு சந்த்ரசசி மிகவும் ஆனந்தமாக கௌர்-நிதாயிக்கு சேவை செய்தாள்.

பக்தா அவளுக்கு சேவையில் உதவினாள். பக்தாவை அங்குள்ளவர்கள் 'பிஸிமா' (அத்தை) என்று கூறுவார்கள். பக்தாவோ சந்த்ரசசியை 'அக்கா' என்று அழைப்பாள். அதனால் சந்த்ரசசியையும் எல்லோரும் 'பிஸிமா' என்றே அழைக்க ஆரம்பித்தார்கள்.

இங்கு கௌர்-நிதாய் பல லீலைகள் புரிந்தார்கள். அவர்கள், எப்பொழுதும் பிஸிமாவை ஏதாவது ஒன்று வேண்டுமென்று கேட்டு தொல்லைப்படுத்துவார்கள். அவர்களின் தேவைகளுக்கு ஒரு எல்லையே இல்லாமல் போய்க்கொண்டிருந்தது. சில சமயம், அவர்கள் தங்கள் தேவையைப் புதியதாக யாராவது ஒருவரிடம் தெரிவித்து பூர்த்தி செய்துகொள்வார்கள்.

இவ்வுலகத்தையே இயக்கும் சக்திகளான கௌர்-நிதாய் இப்படி எல்லோரிடமும் போய் பிக்ஷை யாசிப்பது விநோதமாக உள்ளதல்லவா! ஆனால், இதில் ஆச்சர்யம் ஒன்றும் இல்லை. ப்ரேமை எனும் உலகிலேயே வாழ விரும்பும் இவர்களுக்கு தங்கள் பக்தர்களின் ப்ரேமை அர்ப்பணத்திற்கு ஈடாக வேறு ஒன்றும் தெரியாது. ஆகவே, அவர்களிடம் அவ்வாறே லீலை செய்கின்றான் பகவான்.

கௌர்-நிதாயிக்கு ஒருமுறை பாதுகைகள் வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டுவிட்டது. அவர்கள் இதை பிஸிமாவிடம் கேட்கவில்லை. ஏனென்றால், பிஸிமாவிடம் சொன்னால், 'உங்களுக்கு எதுக்கடா பாதுகைகள்? நீங்கள் எங்கும் செல்ல வேண்டாம்!' என்று கூறிவிடுவாள் என்று தெரியும். அவர்களின் பிரிவை ஒரு கணம் கூட அவள் பொறுக்கமாட்டாள். அதனால், அவர்கள் வேறோரு பக்தரை எதிர்பார்த்தவண்ணம் இருந்தனர். ஆவணி மாதத்தில் வங்காளத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி, தரிசனத்திற்காக ப்ருந்தாவனம் வந்தாள். கௌர்-நிதாய் கோயில் அருகிலுள்ள சினியகுஞ்ஜம் என்ற இடத்தில் அவள் இருந்தாள்.

ஒருநாள், லேசாக மழை பெய்துகொண்டிருந்தபோது, பிஸிமா வராந்தாவில் அமர்ந்துகொண்டு இடதுகையால் கௌர்-நிதாயிக்கு 'பங்கா' போட்டுக்கொண்டு வலது கையால் ஜபமாலையை உருட்டிக் கொண்டே ஜபம் செய்துகொண்டிருந்தாள். சற்றே கண்ணயர்ந்தாள்.

அப்பொழுது அவள் கௌர்-நிதாய் தங்கள் இடத்திலிருந்து இறங்கி வெளியே செல்வதைக் கண்டாள். அவள் அவர்களிடம், 'ஹே கௌர்-நிதாய்! மழையில் எங்கு செல்கிறீர்கள்? ஜலதோஷம் பிடித்துவிடும்!' என்று கூறினாள். அவளுக்கு ஒரு பகல்-கனவு கண்டாற்போல் இருந்தது. மீண்டும் 'பங்கா' போட்டவாறே ஒரு மயக்க நிலையிலிருந்தாள். இதற்கிடையில் கௌர்-நிதாய் அருகிலுள்ள சினியகுஞ்ஜத்திற்குச் சென்றார்கள். அப்பொழுது மேற்கூறிய அந்த வங்காள பக்தை உறங்கிக்கொண்டிருந்தாள். கௌர்-நிதாய் அவளை உலுக்கி, 'எழுந்திரு! இங்கு நீ தூங்குவதற்கு வரவில்லை' என்றார்கள். கனவு போல் தோன்றிய அந்நிலையிலேயே அவள் அவர்களிடம் 'நீங்கள் யார்?' என்று கேட்டாள்.

'எங்கள் பெயர் கௌர்-நிதாய். நாங்கள் பனகண்டியிலுள்ள பிஸிமா என்பவளின் குழந்தைகள்', என்றனர்.

'எதற்காக இங்கு வந்தீர்கள்?'

'எங்களிடம் காலணிகள் இல்லை. எங்கள் கால்கள் எவ்வளவு மண்ணாகிவிட்டது பார்! எங்களுக்கு காலணிகள் வாங்கித் தா!' என்று கேட்டனர்.

அந்தப் பெண்மணி அவர்களின் திவ்யமான அழகைக் கண்டு அப்படியே மயங்கிவிட்டாள். இது போன்ற அழகை அவள் அதற்கு முன்பு கண்டதேயில்லை. முழித்துக்கொண்டவுடன் அவள் அச்சிறுவர்களின் நினைவிலேயே இருந்தாள். அவளை அறியாமலேயே கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக்கொண்டிருந்தது. இந்நிலையிலேயே அச்சிறுவர்களை தேடிக்கொண்டு அவள் பனகண்டி வந்தடைந்தாள். ''பிஸிமாவினுடைய வீடு எது?' என்று அவள் ஒருவரைக் கேட்க, அவர் கௌர்-நிதாய் கோயிலைக் காண்பித்தார். கோயிலுள் சென்று பிஸிமாவிடம், 'இதுதான் பிஸிமாவின் வீடா? என்று கேட்டாள்.

'ஆம். இது பிஸிமாவின் குழந்தைகளான கௌர்- நிதாயினுடைய வீடு. நீ ஏன் அழுகின்றாய்?' என்றாள் பிஸிமா.

'உன்னுடைய குழந்தைகள் எங்கே? நான் அவர்களைக் காண வேண்டும்' என்றாள் அந்தப் பெண்மணி.

‘அவர்கள் இங்கு தானுள்ளார்கள்’ என்று கூறி கோவில் கதவைத் திறந்தாள்.

அந்தப் பெண்மணி தனக்கு கனவில் தோன்றிய அச்சிறுவர்களே நேரில் நிற்பதைக் கண்டு ஆச்சர்யமும் ஆனந்தமும் அடைந்தாள். இந்த இன்ப அதிர்ச்சியில் அவள் மூர்ச்சையாகிக் கீழே விழுந்து விட்டாள். நினைவு திரும்பியவுடன் அவள் தன் கனவு முழுவதையும் பிஸிமாவிடம் கூறினாள். பிஸிமாவும் தன் அனுபவத்தை அவளிடம் கூறினாள். இருவரும் ஒருவரையொருவர் ஆரத்தழுவிக்கொண்டனர். ஆனந்தமிகுதியில் ப்ரேம-பாஷ்பம் அவர்கள் கண்களிலிருந்து பெருகியது.

பாக்கியம் செய்த அந்தப் பெண்மணி, கௌர்-நிதாயிக்கு வெள்ளியிலான பாதுகைகளை வழங்கினாள். இன்றும், அவர்கள் அதை உபயோகிக்கின்றனர்.

**தொடரும் ...**


***Sri Hari :***

***Pranams to the Lotus feet of***

**H.H. SRI SRI MURALIDHARA SWAMIJI**

**M/s. BUDDIES INFOTECH PRIVATE LIMITED**

*Web Designing and Application Development*

Old No. 22, New No. 34, Sriman Srinivasa Road,
Alwarpet, Chennai - 600 018.
Phone No. 044-421 44 662
e-mail : contact@buddiesinfotech.com


ஸ்ரீ ஹரி :

<u>ஸ்ரீ பிரேமிகவரதன் மருத்துவ முகாம், மஹாரண்யம், மதுரபுரி</u>

ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் ட்ரஸ்ட், சென்னை சார்பில் ஸ்ரீ பிரேமிகவரதன் இலவச மருத்துவ முகாம், மஹாரண்யம், மதுரபுரியில், செப்டம்பர் மாத எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெற்றன.

**- Trustees**

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து-139

*நீ நானறப்புலி நிதங்களி மயமா*
*நின்றிடு நிலையருள் அருணாசலா*

'அத்வைதமாக', தெய்வத்துடன் ஒன்றியிருக்கும் நிலையைப் பிரார்த்திக்கிறார் பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகள். 'நீ நானற' 'நீ' என்றும், 'நான்' என்றும் 'அற' - இல்லாது இருக்கும் நிலை அருள வேண்டுமென அருணாசலேஸ்வரனை நோக்கிப் பிரார்த்திக்கிறார்.

திருப்புகழிலும் அருணகிரிநாதர் இதுபோலவே முருகனிடம், 'நீ வேறெனாதிருக்க நான் வேறெனாதிருக்க' என்று இருக்கும் நிலையை பிரார்த்திக்கிறார்.

இப்படி இறைவனிடம் பிரார்த்திப்பது எதைக் காண்பிக்கிறது என்றால், துவைதமான நிலையிலே எப்படியும் துக்கம் என்பது உண்டு. நமக்கு வேறாக ஒருவர் உள்ள வரையில் அவரிடம் கோபமோ, போட்டியோ, காமமோ வர வாய்ப்பு உண்டு. ஆயின், துவைதம் என்பது துளியும் இல்லை எனில், அதில் வேறு ஒரு நபரோ, வஸ்துவோ இல்லை. எதுவும் ஒருவருக்கு அன்னியமாக (வேறாக) இருக்கப் போவதில்லை. ஆதலால், அங்கு கோபமோ, பயமோ, காமமோ வாராது. அந்த நிலையில்தான் பேரானந்தம் முழுமையாக வாய்க்கப் பெறுகிறது.

'நிதங்களி மயமா' என்றால் கட்டித் தழுவிக்கொள்வது என்று பொருள். அஃதாவது அத்துனை இறுக்கமாக வேறுபாடு இன்றி இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறார். 'நின்றிடு நிலை'. அப்படி அருணாசலா' நீ என் மனதினுள் புகுந்து என்னுடன் கலந்து நிற்பாய் எனில், எல்லையற்ற நிரந்தரமான ஆனந்தத்தில் நிலைத்து இருக்கலாமே' என்கிறார்.

இதற்கு முந்தைய 'நின்னெரி எரித்து' பாடலில் 'நின்னருள்' என்ற பதத்தில் பகவான் அஸ்த தீக்ஷை (கைகளினால் ஸ்பரிசம் செய்து

கொடுக்கப்படும் அருள்) பற்றிச் சொல்கிறார். அஸ்த தீக்ஷை நேரடியாகத் தொட்டு கொடுக்கப்பட்டாலும் அது மோக்ஷத்தையே கொடுத்துவிடும் என்று சொல்ல முடியாது. இந்த அஸ்த தீக்ஷையை இதற்கு முந்தைய ஒரு பாடலான, **தொட்டருட் கை மெய் கட்டிடா எனில்யான் நட்டமாவேனருளருணாசலா** என்றும் சிறப்பித்துப் பாடுகிறார்.

ஸ்வாமி விவேகானந்தரின் குருவான ராமகிருஷ்ணர் தன்னிடம் வருபவர்களின் குணாதிசயங்களை அவர்களை தொட்டு, தொட்டே, மாற்றி விடுவார். அவரே, இதை சொல்லியதும் உண்டு. பகவானின் சரிதத்திலும் அவர் காவ்யகண்ட கணபதி முனிவருக்கு திருவொற்றியூரில் சித்தர்கள் போல் ஆகாச மார்க்கமாய் வந்து கரங்களினால் அருள் புரிந்தார் என்றுள்ளது. இதை பகவானும் ஒப்புக்கொண்டு உள்ளார். ஆயின் மேற்கூறிய சம்பவங்கள், அருள் பெற்றவரை உடனடியாக மோக்ஷத்தில் சேர்த்தது (முக்தி நிலை) என்று இல்லை. அந்த அருள் அவர்களுக்கு மிகவும் உதவியாக இருந்தது என்பதை மறுக்க முடியாது. உதாரணமாக, காவ்ய கண்ட கணபதி முனிவர், பகவானின் அருள் பெறாவிடில், ஆன்ம அனுபவம் பெற மிகவும் அதிக முயற்சி செய்ய வேண்டியிருக்கும். பகவானின் அருள் அவருக்கு பெரிய உதவியாக இருந்து, அவரை லகுவாக சாதனையில் முன்னேறச் செய்தது.

அஸ்த தீக்ஷயினால் முக்தி அளிக்கவும் முடியும். இதுவும் பகவானின் சரித்திரத்தில் நிரூபணமாகி உள்ளது. பகவானின் தாயாரின் அந்திம காலத்தில், அவருடைய ஹிருதயத்திலும், தலையிலும் கைகளை வைத்துக்கொண்டு, தாயாரின் வாசனைகள் முழுவதும் ஒடுங்கும்வரை அப்படியே வைத்து இருந்தார் என்றுள்ளது. அது தாயாருக்கு முக்தி அளித்தது. இதுபோலவே, பழனிஸ்வாமி எனும் அன்பருக்கு பகவான் மரணகாலத்தில் அஸ்த தீக்ஷை கொடுத்தார். (தாயாரின் முக்திக்கு முன் ஏற்பட்டது இது). அப்பொழுது, பழனிஸ்வாமியின் மனம் ஆன்மாவில் ஒடுங்கியது என்று எண்ணி, ரமண மஹரிஷிகள் கையை எடுத்துவிட அன்பர் பழனி ஸ்வாமியின் ப்ராணனோ ஜோதியாய் கண் வழியாக மேலுலகங்களுக்குச் சென்றுவிட்டது. இதையும் பகவான் தெளிவாக

குறிப்பிட்டு இருக்கிறார். இப்படி குருவோ, பகவானோ ஒருவருக்கு தீக்ஷை கொடுப்பாரே எனில், அது ஒருவரின் பல நூற்றுக்கணக்காண பிறவிகளை அழித்துவிடும்.

மேற்கண்ட சம்பவத்திலும், பகவானின் அருள் இல்லை எனில், அன்பர் பழனிஸ்வாமி, பகவான் அருளினால் பெற்றதை விட, மிகவும் குறைந்த நிலையைதான் அடைந்திருப்பார் என்று சொல்லி விடலாம். அவருடைய வாசனைகளை பகவான் மரண காலத்தில் அழித்ததுதான் அவருக்கு பேருதவியாக இருந்தது. குருவின் அருள் அப்படிப்பட்ட மகத்தான சக்தி வாய்ந்தது.

**(தொடரும்)**

---

**உங்கள் கவனத்திற்கு...**

- ஒவ்வொரு வியாழக்கிழமைகளில், இரவு 10.10 மணிக்கு சென்னைத் தொலைக்காட்சி-பொதிகையில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் **'ஆத்ம தரிசனம்'** ஒளிப்பரப்பு ஆகும்.
- 'சக்தி விகடன்' ஆன்மீக இதழில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் **'தினம் தினம் திருநாளே!'** என்ற ஆன்மீக தொடர் வெளிவருகிறது.
- If you have any questions or doubts concerning Spirituality, Mental peace or problems in life or about dharma, please write to us by clicking at : http://www.namadwaar.org/answers/askquestion.php

---

ஸ்ரீ ஹரி:

## ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள் அன்னதானக் கூடம்

ஸ்ரீ சாந்தீபனி குருகுல ட்ரஸ்ட் சார்பில், மஹாரண்யம் மதுரபுரி, ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள் அன்னதானக் கூடத்தில் தினமும் நண்பகல் 12 மணியளவில் கிராமப் பொதுமக்களுக்கு அன்னதானம் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

மஹாரண்யம், மலைப்பட்டு, அழகூர் மற்றும் பல கிராமங்களில் இருந்து வரும் பொதுமக்கள் இந்த அன்னதானத்தினால் பயனடைகின்றனர்.

**- டிரஸ்டிகள்**

ஸ்ரீ ஹரி :

## மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதனின் 14-வது வருட பிரம்மோத்ஸவம்!

மதுரபுரி மஹாரண்யத்தில், ஸ்ரீ மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதனின் 14-வது வருட பிரம்மோத்ஸவம் கோலாகலமாக 4-9-07 ஸ்ரீ க்ருஷ்ண ஜயந்தி முதல் 13-9-07 வரை வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

4-9-2007 முதல் நாள், அன்று க்ருஷ்ண ஜயந்தியை ஒட்டி கீர்த்தனங்கள் பாடி, பிரேமிகவரதனை நூற்றியெட்டு கலசங்களில் திருமஞ்சனம் செய்து, ஸ்ரீமத் பாகவதத்தில் க்ருஷ்ண அவதாரம் கட்டம் படித்து, க்ருஷ்ணனுக்கு சீடை, முறுக்கு முதலிய நிவேதனங்களைச் செய்து, குட்டி கிருஷ்ணனை தொட்டிலிட்டு பாடினர்.

மறுநாள் 5-9-07, அன்று காலையில் நந்தோத்ஸவம் தொடர்ச்சியாகி பிரேமிகவரதனை ஹம்ஸவாஹனத்தில் புறப்பாடு செய்து உறியிலிருக்கும் வெண்ணை, பால், தயிர், இவற்றை ஒருவர் மீது ஒருவர் அடித்துக்கொண்டு க்ருஷ்ணன் பிறந்ததைக் கொண்டாடினர்.

உத்ஸவ பத்து நாட்களிலும் தினமும், காலையில் பெருமாளுக்கு ப்ரபோதனம், - பெருமாளை எழுப்பி பால் தந்து பிறகு காலை பல்லக்கில் புறப்பாடு, உஞ்சிவிருத்தி பஜனை, ஸ்ரீமத் பாகவத பாராயணம் பெருமாளுக்கு திருமஞ்சனம், பூஜை கண்குளிர கண்டபின், ஸ்ரீ ஸ்வாமிஜியின் திருக்கரங்களினால் திருமஞ்சன தீர்த்தம் பெற்றனர்.

மாலையில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் ஸ்ரீமத் பாகவத உபன்யாஸம். ஸஹஸ்ரநாமத்திற்கும் பிறகு வாஹினி புறப்பாடு, திவ்யநாமம் டோவோத்ஸவம் என்று உத்ஸவம் நடைபெற்றது.

5-9-07 அன்று சேஷவாஹனம். பாம்பின்மீது பள்ளி கொண்ட பெருமாள் சேஷவாஹனம் வருவது சிறப்போடும் 6-9-07 சிம்மவாஹனம். சிம்மவாஹனத்தில் வந்து வந்துதான் நரசிம்மா வதாரத்தில் சிம்மமாகவே வந்துவிட்டானோ என்னவோ!

7-9-07 அன்று ஏகாதசி, பெருமாளுக்கு மிகவும் உன்னதமான தினம். நம் பிரேமிகவரதனுக்கும் மிக உன்னதமான நாள். சிறப்பு திருமஞ்சனம் காலையில், கருடவாஹனம் மாலையில், கருட சேவை கிடைத்தவனுக்கு வைகுண்டசேவையும் மிக எளிதேயாம்.

பகவானின் கீர்த்தியை பாடிப் பாடி, திவ்யநாம கீர்த்தனம் செய்தனர் அன்று 08-09-07 கோவிந்த பட்டாபிஷேகத்திற்கு விடியற்காலையிலேயே எழுந்து மதுரபுரி ஆஸ்ரமம் எதிரே அமைந்துள்ள மதுராசல மலை மீது ஏறி அங்குள்ள மலையப்பனை வணங்கி, பிரேமிகவரதனுக்கு கோவிந்த பட்டாபிஷேக வைபவம் கொண்டாடப்பட்டது.

இந்திரன் வெட்கி தலை குனிந்து க்ருஷ்ணனுக்குக் கொடுத்த பரிசாகிய வெண்யானை மீது அன்று இரவு புறப்பாடு. கருடவாஹனமும் கோவிந்த பட்டாபிஷேகமும் சனி, ஞாயிறு அன்று வந்ததால் எல்லா பக்தர்களுக்கும் மிகவும் சந்தோஷம். உத்ஸவவைபவத்தில் கலந்துகொள்ள வசதியாக அமைந்திருந்தது.

9-9-07 ஞாயிறன்று குதிரை வாஹனத்தில் புறப்பாடு சென்று வந்து அன்று பாகவதோத்தமர்களின் பஜனையும், பக்த புண்டலீகன் ஸங்கீத நாடகமும் மனதைக் கொள்ளைக்கொண்டது.

10-9-07 திங்களன்று எண்ணற்ற பக்தர்களின் ஒத்துழைப்பால் மதுரபுரி மலர்புரி ஆகிவிட்டது. எங்கும் மலர் மாலைகளால் அலங்காரம். பெருமாளுக்கு நிகுஞ்சம் அமைக்கப்பட்டு தீபங்கள் ஏற்றி உத்ஸவம் கொண்டாடப்பட்டது. அன்று அவர்களின் குச்சிப்புடி நாட்டியம் நடைபெற்றது.

11-9-07 செவ்வாயன்று காலையில் புன்னைமர வாஹனமும் மாலையில் ஜானவாஸமும் நடைபெற்றது. வாழ்க்கையின் லக்ஷியமே திவ்யதம்பதிகளுக்கு, பெருமாளுக்கும் தாயாருக்கும் கல்யாணம் செய்த பார்ப்பதே என்று இருக்கும் பாகவத பெருமக்களுக்கு மிகவும் வரப்ரசாதம். அஷ்டபதிகள் பாடி ஜானவாஸம் முடிந்து மாலை மாற்றி, ஊஞ்சலாடி, லாலிபாடி பிரேமிகவரதன் மாதுரிஸகீயுடன் தன் இடத்தில் அமர்ந்து விடிய, விடிய மதுரமான பஜனை கீர்த்தனைகளைக் கேட்டனர்.

12-9-07 அன்று ராதா கல்யாணம், சூர்ணிகை, லக்னாஷ்டகம் பாடி, பாகவத சம்பிரதாயப்படி பிரேமிக வரதனுக்கு கல்யாணம் நடைபெற்றது. அஷ்டபதி எத்துணை தடவை பாடினாலும் அலுக்காது. எண்ணற்ற பெருமக்கள் பக்தர்கள் கலந்துகொண்டனர்.

இரவில் தெப்பம், பிரேமிகவரதன் காமதேனு. காமதேனு வாஹனத்தில் மாதுரீஸகியுடன் குளத்திற்குப் புறப்பட்டுச் சென்று அங்கு தெப்பத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜியுடன் உலா வந்தது. அந்த நிலா வெளிச்சத்தில் பஜனை பாடல்கள் பாடி உத்ஸவம் நடைபெற்றது.

13-9-07 விடையாற்றி - உத்ஸவ பூர்த்தி நாள். அன்று காலை பல்லக்கில் மஹாரண்ய குளத்திற்குச் சென்று அவப்ருதஸ்நானம் செய்து திரும்பி வந்த பக்தர்கள் விடைபெற்றுச் சென்றனர்.

## அறிவிப்பு

21.10.2007 அன்று நடைபெறுவதாக இருந்த பெங்களூர், கல்கரே, ஸ்ரீ ராமமூர்த்தியின் லேஅவுட்டில் அமைந்துள்ள ஸ்ரீ சுந்தர ஹனுமார் திருக்கோயில் ஸம்ப்ரோக்ஷணம் 11.02.2008 வஸந்த பஞ்சமிக்கு தள்ளிபோடப்பட்டுள்ளது.

❖ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களிடம் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை

Personal Secretary to

**H.H. SRI SRI MURALIDHARA SWAMIJI**

New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83

Telephone : 044-24895875, email ID : contact@madhuramurali.org

என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

## செய்திகள்

**ஆகஸ்ட் 18-ஆம் தேதி**

முத்தாநல்லூர் அரசுப் பள்ளி - சரியபுரா, அநேகல் தாலுக்காவில் ஸ்ரீ நவீன்பட், ஸ்ரீ அனந்தராமன், ஸ்ரீ குமார் ஸ்ரீமதி புவனா மற்றும் மற்றும் அன்ஜுலா இந்த நாம கீர்த்தனத்தில் கலந்து கொண்டனர். பள்ளி முதல்வர் ஸ்ரீமத் சுகுனாவும் இதில் பங்கேற்றார்.

ஸ்ரீ நவீன் பட் பின் குழந்தைகளுக்கு முதமுன் சொற்பொழிவு ஒரு சின்னகதையை சொல்லி, மஹாமந்திரத்தின் மகத்துவம் பற்றியும் விளக்கினார்.

**ஆகஸ்ட் 24-ஆம் தேதி**

**வேலூர் மாவட்டம், அகரம் கிராமம்**

ஸ்ரீ வாரணவல்லி ஸமேத ஸ்ரீ கஜேந்திரவரதராஜஸ்வாமி ஆலயத்தில் ஸ்ரீ வீரபராக்ரம ஆஞ்நேயர் சன்னதி கும்பாபிஷேக வைபவத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டார்கள்.

**செப்டம்பர் 1, 2 தேதிகள்**

ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் அருளாசியுடன் ஸ்ரீ க்ருஷ்ண ஜயந்தியை ஒட்டி ஸ்ரீ ராதா கல்யாண மஹோத்ஸவம் கோவூரில் ஸ்ரீ கருணாகர ஸ்வாமி திருக்கோயிலில் ஸ்ரீ முரளிதரதாஸ் சத்சங்கம் சார்பில் ஸ்ரீ தனலட்சுமி மண்டபத்தில் நடைபெற்றது. ஸ்ரீ சட்டநாதன் மற்றும் பாகவதர்கள் பலரும் சேர்ந்து இதனை நடத்தினார்கள். சுமார் 400 பக்தர்கள் இதில் கலந்துகொண்டனர்.

**செப்டம்பர் 5-ஆம் தேதி**

சென்னை பட்டினப்பாக்கத்தில், வங்கக் கடல் நாயகி அருள்மிகு ஸ்ரீ துலுக்காணத்தம்மன் ஆலயத்தில் ஸ்ரீ க்ருஷ்ண ஜெயந்தி விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இவ்வைபவத்தில் 200க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொண்டு ''ஹரே ராம'' மஹாமந்திர கீர்த்தனம் பாடிக் கொண்டும் பகவான் க்ருஷ்ணரை ஊஞ்சல் சேவை செய்தும், பல்லக்கில் பகவான் க்ருஷ்ணரை புறப்பட்டு செய்தும் கொண்டாடினர். நம் சத்சங்கத்தைச் சேர்ந்த பலர் இதில் கலந்து

கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை திரு. அறிவரசன், திரு. அருணாச்சலம் மற்றும் பட்டினப்பாக்க கேந்த்ரா பக்தர்கள் செய்து கொடுத்தனர்.

### செப்டம்பர் 9-ஆம் தேதி

மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸை பெருமாள் திருக்கோயிலில் திருக்கல்யாண வைபவம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. நமது ஸங்கத்தைச் சேர்ந்த பாகவதர்கள் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் தமிழ் கீர்த்தனைகளைப் பாடி திருக்கல்யாண வைபவத்தை நிகழ்த்தினார்கள்.

### செப்டம்பர் 15-ஆம் தேதி

தஞ்சாவூரில் சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷாகேந்த்ரா கிளைகள் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் அருளாசியுடன் துவக்கப்பட்டது. மஹிளா சபாவை சேர்ந்த திருமதி சாவித்ரி, திருமதி கீதா, திருமதி ஹம்ஸா ரவி முதலியோர் முதலில் அருள்மிகு விநாயகர் திருக்கோயிலில் நாம மஹிமைப் பற்றி பேசினர் மஹாமந்திர கீர்த்தனம் நடைபெற்றது.

### செப்டம்பர் 16-ஆம் தேதி

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் அருளாசியுடன் நம் கேந்த்ரா அன்பர்களால் திண்டிவனத்தில் நாமகீர்த்தன கூட்டுப்பிரார்த்தனை நடத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக காரைக்குடியில் மக்கள் சங்கர மடத்தில் நலம்வேண்டி கூட்டுப் பிரார்த்தனை நடந்தது. சென்னை சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்திராவைச் சேர்ந்த திரு. கேசவன், மகா மந்திர நாமகீர்த்தனத்தைப் பற்றி பேசினார். கூட்டு பிரார்த்தனையால் மக்களுக்கு கிடைக்கும் நன்மைகள் பற்றி பேசினார். காரைக்குடி சங்கரமடம் மேலாளர் திரு. விஸ்வநாதன் வரவேற்றார். காரைக்குடி பக்தர்கள் சங்கரசேது, சிவராமகிருஷ்ணன், கிருஷ்ணமூர்த்தி, கல்யாணம், சந்திரா உட்பட பலர் பங்கேற்றனர். பேராசிரியர் திரு. பாலசந்திரன் நன்றி கூறினார். இதில் முன்னூறுக்கும் மேற்பட்டவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

### செப்டம்பர் 16-ஆம் தேதி

சென்னை, ஆலப்பாக்கம், ஸ்ரீ சக்தி விநாயகர் சன்மார்க்க சங்கள் சார்பில், ஆலப்பாக்கம் ஸ்ரீ சக்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற விநாயக சதுர்த்தி விழாவில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டு விழா மலரை வெளியிட்டு அருளுரை வழங்கினார்கள்.

கோவில்பட்டி சுற்றி அமைந்துள்ள K. துரைஸ்வாமிபுரம், சண்முக சிகாமணிநகர், உதுபட்டி கிராமங்களில் உள்ள பல கோயில்களில் நாம கேந்த்ராக்கள் துவக்கப்பட்டன. ''ஹரே ராம...'' நாம கீர்த்தனம் நடத்தப்பட்டது. கோவில்பட்டி இளங்கோ மற்றும் தூத்துக்குடி அன்பர்கள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். ஒவ்வொரு கேந்த்ராவிலும் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். நம் சத்சங்கத்தினர் இதில் கலந்துகொண்டு நாம மஹிமைப் பற்றி பேசினர்.

### செப்டம்பர் 22-ஆம் தேதி

புரட்டாசி முதல் சனிக்கிழமையை ஒட்டி மஹாரண்யம் ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸ பெருமாள் உத்ஸவர் ஸ்ரீ பக்தகுதூஹலன் மலைப்பட்டு கிராமத்துக்கு எழுந்தருளினார். கிராம மக்கள் அனைவரும் பெருமாளை தரிசனம் செய்தனர்.

சைதன்ய மஹாபிரபு நாமபிஷா கேந்த்ரா திருச்சி சார்பில் (மஹாமந்திர நாமகீர்த்தன பிரார்த்தனை நடைபெற்றது. சென்னை கேந்த்ராவைச் சேர்ந்த திரு. ராமச்சந்திரன் மற்றும் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் கலந்துகொண்டு நாமமஹிமை பற்றி உரையாற்றினார்கள். திரு. என்.எஸ். மகேஷ்பாபு அவர்கள் இதற்கான ஏற்பாடுகளை செவ்வனே செய்திருந்தார்.

### செப்டம்பர் 23-ஆம் தேதி

சென்னை கொடுங்கையூரில் ஸ்ரீ ஸர்வசக்தி விநாயகர் ஆலய வளாகத்தில் ''ஹரே ராம...'' நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றது. சென்னை கேந்த்ராவைச் சேர்ந்த திரு. K.L. வீரராகவன் நாம மஹிமைப் பற்றி பேசினார்கள். 400க்கும் மேற்பட்டோர் ''ஹரே ராம...'' நாமகீர்த்தனத்தில் கலந்துகொண்டனர்.

திரு T.S. கிருஷ்ணமூர்த்தி, திருமதி பிருந்தா கிருஷ்ணமூர்த்தி, திரு. ஐயப்பன் மற்றும் பலர் இதற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார்.

கடந்த4 வருடங்களாக கொடுங்கையூரில் நாம கீர்த்தனம் நடைபெற்றுக்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## செப்டம்பர் 23-ஆம் தேதி - புரட்டாசி சிரவணம்

## - ஸ்ரீ ஸ்ரீநிவாஸபெருமாள் அவதாரதினம்

சென்னை பிரேமிகபவனத்தில், ஸ்ரீ ஸ்ரீநிவாஸபெருமாளின் அவதார தினத்தை ஒட்டி காலையில் சிறப்பு திருமஞ்சனம் நடைபெற்றது. மாவிளக்கு போடப்பட்டது. பெருமாளுக்கு விசேஷ நைவேத்யங்கள் செய்யப்பட்டன. ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அருளுரை வழங்கினார்கள். அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

## செப்டம்பர் 26-ஆம் தேதி

ஜகத்குரு ஸ்ரீ பகவந்நாம போதேந்த்ர ஸ்வாமிகள் மஹாஸமாதி அடைந்து எழுந்தருளியிருக்கும் அதிஷ்டானமுள்ள ப்ருந்தாவன க்ஷேத்ரமாகிய கோவிந்தபுரத்தில், ஸ்ரீ க்ருஷ்ண சைதன்ய மஹாப்ரபுவின் நினைவு மண்டபமாகவும், ஸ்ரீ போதேந்த்ர-ஸ்வாமிகள் நாம மஹிமையை நிரூபித்த க்ஷேத்ரமாகிய பூரி ஜகன்னாத க்ஷேத்ரத்தின் நினைவு மண்டபமாகவும், நம் ஸ்வாமிஜி அவர்களால் புதியதாக நிர்மாணம் செய்யப்பட்டுள்ள சைதன்ய குடீரத்தின் திறப்பு விழா புரட்டாசி பௌர்ணமி ஸ்ரீ போதேந்த்ர ஸ்வாமிகள் ஆராதனை தினத்தன்று ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அவர்கள் கரகமலங்களால் திறந்து வைக்கப்பட்டது. அங்கு, தொடர்ந்து, அகண்ட ''ஹரே ராம...'' மஹாமந்திர நாம கீர்த்தனம் நடைபெற்றுக்கொண்டு வருகின்றது.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் பெரியகுளம் நாமகேந்த்ராவிற்கு விஜயம் செய்து அங்கு நடைபெற்ற நாம வைபவங்களில் கலந்து கொண்டார்கள்.

## செப்டம்பர் 27-ஆம் தேதி

சென்னை அயனாவரம்

அருள்மிகு கரிய மாணிக்க பெருமாள் திருக்கோயிலில் மற்றும் அயனாவரம் கேந்த்ரா இடங்களில் நடைபெற்ற நாமகீர்த்தன வைபவங்களில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டார்கள். அயனாவரம் கேந்தராவைச் சேர்ந்த திரு. பலராமன் மற்றும் பக்தர்கள் நாம பிரசாரம் செய்து வருகின்றனர்.

அவ்வமயம் ஸ்ரீ ராமானுஜ சாரிட்டபிள் டிரஸட் அவர்கள் ஆதரவில் நடைபெறும் இலவச கணினி பயிற்சி மையத்திற்கும் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் விஜயம் செய்தார்கள். அங்கும் நாமகீர்த்தனம் நடைபெற்றது.

### செப்டம்பர் 28-ஆம் தேதி

சென்னை கொடுங்கையூர் திருமதி ப்ருந்தா கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இல்லத்திலும் கொடுங்கையூர் அருள்மிகு வரசித்தி விநாயகர் ஆலயத்திலும் நடைபெற்ற மஹாமந்திர நாமகீர்த்தன வைபவங்களில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள்.

சாய் விவேகானந்தா பள்ளியில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் விஜயம் செய்து, அப்பள்ளி மாணவர்கள் மத்தியில் சிறிய சொற்பொழிவாற்றினார்கள். கல்வியில் ஆன்மீகமும் இணைந்து கற்பிக்கப்பட வேண்டுமென்று பின்பு ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அருளாசி வழங்கினார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிஜி சர்வசக்தி விநாயகர் ஆலயத்திற்கு விஜயம் செய்தார்கள். நமது கேந்த்ராவைச் சேர்ந்தவர்கள் வாரந்தோறும் மஹாமந்திர கீர்த்தனம் மற்றும் மஹா பிரார்த்தனை செய்தார்கள்.

### செப்டம்பர் 29-ஆம் தேதி

மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயில் உத்ஸவர் ஸ்ரீபக்தகுதூஹலன் மஹாரண்ய கிராமத்திற்கு எழுந்தருளினார்.

### செப்டம்பர் 30-ஆம் தேதி

பரமகுடி சிவஞானம் செட்டியார் கல்யாண மஹாலில் மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை காலை 10 மணி முதல் 12 மணி வரை நடைபெற்றது. நமது கேந்த்ராவைச் சேர்ந்த திரு. G. வெங்கடேஸ்வரர் நாம மஹிமையைப் பற்றி பேசினார். இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். பரமகுடியில் ஒவ்வொரு சனிக்கிழமைகளில் திருமதி கவிதா அவர்களின் இல்லத்திலும், திரு. செல்வன் அண்ணாமலை இல்லத்திலும், ஞாயிறுதோறும் நாணல் இங்கிலீஷ் சென்டரிலும் மஹாமந்திர நாமகீர்த்தன நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. இதில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொள்கின்றனர்.

## பெரியகுள நிகழ்ச்சிகள்

**17–08–07** திருமூலர் தபோவனம் பரிபாலனசபை (பெரியகுளம்) திருவிளக்கு பூஜை - ஹரே ராம நாமகீர்த்தனம்.

**20–08–07 to 26–08–07** பெரியகுளம் ஸ்ரீ காளஹஸ்தீஸ்வரர் கோயில் ஸ்ரீ சேஷாத்திரி ஸ்வாமி சொற்பொழிவு, ஹரே ராம நாமகீர்த்தனம்.

**02–09–07** கம்பம் மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை - கம்பராயப் பெருமாள் கோயில்.

**04–09–07** ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா - ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயிலில் இருந்து பால்குடம் எடுத்துக்கொண்டு நாமகீர்த்தனம் செய்துகொண்டு ஸ்ரீ கோபாலகிருஷ்ணன் கோயில் வரை சென்று அங்கு ஹரேராம நாமகீர்த்தனம் நடைபெற்றது.

தேனி அல்லிநகரம் ஸ்ரீமத் ஆஞ்சநேயர் கோயிலில் 16–09-07 அன்று ஹரே ராம கூட்டுப்பிரார்த்தனை மாலை 6 மணி முதல் 8 மணி வரை நடைபெற்றது.

தேனி மாவட்டம் கோவிந்த நகரம் ஸ்ரீ அரங்கநாதர் திருக்கோயிலில் 21–09–07, 22–09–07 மாலை 6 **to** 8 மணி மஹாமந்திர கூட்டுப்பிரார்த்தனை நகர சங்கீர்த்தனம் நடைபெற்றது. இதில் 400க்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டார்கள்.

இதற்கான ஏற்பாடுகளை பெரியகுளம் கேந்திரா திரு. ஹரே ராமகிருஷ்ணகுமார் **Cell** : 9245439344 மற்றும் கேந்த்ரா உறுப்பினர்கள் செய்திருந்தனர்.

## திருச்சியில் வாரந்தோறும் நாமகீர்த்தனம் நடைபெறும் இடங்கள்

| | |
|---|---|
| சனி மாலை 6.00 - 6.30 | ஸ்ரீ நவநீத கிருஷ்ணன் கோயில் எடத்தெரு. |
| சனி மாலை 7.00 - 8.00 | 16, வெல்டர்ஸ் நகர், தஞ்சை ரோடு |
| ஞாயிறு மாலை 5.00 - 6.00 | ஸ்ரீ துர்க்கை அம்மன் கோயில், பாலக்கரை. |
| திங்கள் மாலை 6.30 - 7.00 | ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோயில், வரகனேரி. |
| வெள்ளி மாலை 6.00 - 6.30 | பக்தர்கள் பலர் வீடுகளில் |

## புதிய வெளியீடுகள்

**நூல்கள் :**

1. Simple Questions & Simple Answers
2. நூற்றுக்கு நூறு
3. இதயத்துடன் ஓர் இதமான வருடல்
4. கலிதர்ம உந்தியார்
5. ஸனாதனப் புதிர்
6. துளஸீ தளங்கள்

**H.H. Sri Sri Muralidhara Swamiji's discourse series in Tamil : Cassettes, Audio CDs, VCDs**

| | | |
|---|---|---|
| 1. | From Goodness to Godliness through Mahamantra Kirtam | DVD, Audio CD, Cassette |
| 2. | துளஸீ தளங்கள் | Audio CD, Cassette |
| 3. | ஸந்த் நாமதேவர் | Audio CD, Cassette |
| 4. | ஸந்த் துக்காராம் | Audio CD, Cassette |
| 5. | ஸ்ரீ க்ருஷ்ண லீலா | Audio CD |
| 6. | கலிகால உசிதம் தர்மம் - 2007 புத்தாண்டில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை (தமிழில்) | Cassette, Audio CD |
| 7. | மஹாமந்திர கூட்டுப்பிரார்த்தனை-2007 (தமிழில்) | VCD |
| 8. | MahaMantra Mass Prayer - 2007 (Clippings of H.H. Sri Sri Swamiji's talk in Tamil with captions in English) | VCD |

**கீர்த்தனங்கள் :**

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜி அருளிய **'கலிதர்ம உந்தியார்'** | Cassette, Audio CD |
| 2. | **மஹாமந்திர கீர்த்தனம்** -ஸ்ரீ ஸ்வாமிஜியின் மதுரமான குரலில் | Cassette, Audio CD |
| 3. | **பஞ்ச கீதங்கள்** | Cassette, Audio CD |

---

| | |
|---|---|
| H.H. Sri Sri Muralidhara Swamiji's 'Kali Dharma Undhiyar' (Lecture in English) by Dr. A. Bhagyanathan (Live Recording) | MP3, Audio CD |

***Contact :***

Ph : 044-24895875

For queries regarding, Madhuramurali, Books, Audio tapes & CDs kindly send e-mail to "publications@madhuramurali.org"

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சி நிரல்

| தேதி/நேரம் | நிகழ்ச்சி/இடம் |
|---|---|
| 07.10.2007 | ஏகாதசி<br>இடம் : மதுரபுரி ஆஸ்ரமம் |
| 10.10.2007 | இரவு 7 மணி - அருளுரை<br>இடம் : அருள்மிகு ஸ்ரீநிவாசப் பெருமாள் திருக்கோயில், ஆம்பூர் |
| 12.10.07 முதல்<br>21.10.07 வரை | நவராத்ரீ உத்ஸவம் |
| 22.10.07 | ஏகாதசி<br>இடம்: மதுரபுரி |
| 25.10.07 முதல்<br>31.10.07 வரை | ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹம்,<br>மஹாமந்திர கீர்த்தனம்<br>இடம் : சிவகாசி |
| 01.11.07 | ராஜபாளையம் |
| 03.11.07<br>04.11.07 | கடலூர் |
| 05.11.07 | ஏகாதசி |
| 06.11.07 முதல்<br>10.11.07 வரை | வேத பாராயணம்<br>இடம் : மதுரபுரி ஆஸ்ரமம் |
| 09.11.07 | ஐப்பசி ஸ்வாதீ -<br>ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் திருநக்ஷத்திரம்<br>ஜெயந்தி மஹோத்வம் |
| 11.11.07 முதல்<br>18.1107 வரை | ஹைதராபாத் விஜயம் |

*Copyright of articles published in '**MADHURAMURALI**' is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writting from the publisher of Madhura Murali.*

**மங்களானி பவந்து**